| | | | |

உற்பத்தி துணை மேலாளர் கையொப்பம்

……………………………

## 3. மூலப்பொருள் பட்டியல் (Bill of Materials)

பணி ஆணை அடக்கவிலை முறையை பின்பற்றும் போது மூன்றாவதாக கவனிக்க வேண்டியது மூலப்பொருள் பட்டியல் ஆகும். குறிப்பிட்ட பணிக்கு வாங்க வேண்டிய மூலப்பொருட்களை இந்த பட்டியலில் முன்கூட்டியே குறிக்க வேண்டும். அவ்வாறு முன்கூட்டியே வேண்டிய மூலப்பொருட்களை தீர்மானிக்கப்பட்டால் தான் அவற்றை தங்கு தடையின்றி வாங்கி குறிப்பிட்ட காலத்தில் குறிப்பிட்ட பணியை நல்ல முறையில் நிறைவேற்ற முடியும்.

## 4. பணி ஆணை செலவுப் பட்டியல் (Job Cost Table)

ஒவ்வொரு பணிக்கும் நேரிடை மற்றும் மறைமுக செலவுகள் ஏற்படும். இவற்றை தனித்தனியே முழுமையாக ஒரு பட்டியலில் ஒவ்வொரு ஆணைக்கும் தனியாக எழுதி வைப்பார்கள். இதற்கு பணி ஆணை செலவுப் பட்டியல் என்று பெயர். இவ்வாறு பணி ஆணை செலவு பட்டியலில் குறித்து வைத்தால் தான், பணி முடிவுறும்போது அந்த பணியின் அடக்கவிலையை மிக சுலபமாக கண்டறிந்து அதன் மீது இலாபத்தை வைத்து வாடிக்கையாளரிடம் இருந்து அந்த பணிக்கு வேண்டிய விலையை பெற இயலும்.

**மாதிரி பணி ஆணை செலவுப் பட்டியல்**

குறிப்பு

| அடக்கவிலை செலவுக் குறிப்பு | | | |
|---|---|---|---|
| விவரங்கள் | முன்கூட்டி தீர்மானிக்கப்பட்டது | ஏற்பட்ட உண்மையான செலவு | வித்தியாசம் |
| நேரடி மூலப்பொருள் | xxx | xxx | xxx |
| நேரடி உழைப்பு | xxx | xxx | xxx |
| மறைமுகச் செலவுக்ள | xxx | xxx | xxx |
| மொத்தம் | xxx | xxx | xxx |

**5. பணி நிறைவேற்றும் குறிப்பு (Job Completion Note)**

ஒவ்வொரு பணியும் அல்லது வேலையும் பூர்த்தி செய்த பிறகு உற்பத்தி துறையில் தயாரிக்கப்படும் குறிப்புக்கு பணி ஆணை நிறைவேற்றும் குறிப்பு என்று பெயர். இதில் அந்த பணிக்கு மொத்தமாக ஏற்பட்ட செலவுகள் மற்றும் ஒவ்வொரு பணி அலகிற்கும் ஏற்பட்ட செலவை தனியாக குறித்து வைப்பார்கள்.

**6. பணி இலாபநட்ட கணக்கறிக்கை (Profit & Loss on Job)**

பணியை நிறைவேற்றிய பிறகு அந்தபணிக்கு ஏற்பட்ட செலவையும் அதனுடைய விலையையும் ஒப்பிட்டப் பார்த்து அந்த பணியில் லாபநட்டங்களை கணடுபிடிப்பார்கள்

எனவே பணிஆணை அடக்கவிலை முறையில் மேற்கண்ட ஆறு வகையான வழிமுறைகளை பின்பற்றவர் இவ்வாறு பின் பற்றுவதால் பணிகள் செம்மையாக நடைபெறும். பணிஆணை அடக்கவிலை முறையை பின்பற்றும் போது, மிக முக்கியமாக காக்க வேண்டிய வேலை முற்றாப்பொருளின் மதிப்பை கணக்கிடுதல் ஆகும் வேலை முற்றாப் பொருளின் மதிப்பை சரியாக கண்பிடித்தால் தான் பணிஆணையின் இலாபநட்டத்தை துல்லியமாக கணக்கிட முடியும்.

**எடுத்துக்காட்டு:1**

பணி105 க்கு பின்வரும் நேரிடை செலவுகள் செய்யப்பட்டள்ளன. நேரடி மூலப்பொருள்கள் ரூ3,415

கூலி

துறை ‘அ’க்கு 80 மணி நேரம் ரூ 2.50 ஒரு மணிக்கு

துறை ‘ஆ’க்கு 60மணி நேரம் ரூ4.00 ஒரு மணிக்கு

மேற்செலவுகள் மதிப்பீடு செய்யப்பட்டது.

**அ. மாறுபடும் செலவுகள்**

துறை ‘அ’க்கு 5,000 (செலவு செய்தது) நேர்முக உழைப்பு மணிக்கு

துறை ‘ஆ’க்கு 6,000(செலவு செய்தது) 3,000 நேர்முக உழைப்பு மணிக்கு

**ஆ. மாறுபடாத செலவுகள்**

மாறாக செலவுகள் மதிப்பீ செய்யப்பட்டது 10,000 உழைப்பு மணிக்கு ரூ7,500

மேற்கண்ட விவரங்களை அடிப்படையாகக் கொண்டு ஓர் பணி ஆணை அடக்கவிலை குறிப்பை தயாரிக்கவும்

குறிப்பு

திடமானிக்கப்பட்ட விற்பனை விலை ரூ 4,750எனக் கொள்க.

**பணிஅடக்கவிலைக் குறிப்பு**

**பணிஎண்:105**

| விபரம் | ரூ. | ரூ. |
|---|---|---|
| நேரடி மூலப்பொருள்கள் | | *5,000* |
| **கூலிகள்** | | |
| துறை 'அ'க்கு *(60 x 3)* | *180* | |
| துறை 'ஆ'க்கு *(80 x 2)* | *160* | |
| துறை 'இ'க்கு *(40 x 4)* | *160* | *500* |
| **மேற் செலவுகள்** | | |
| துறை 'அ'க்கு $\frac{5,000}{[illegible]} \times 60$ | *60* | |
| துறை 'ஆ'க்கு $\frac{3000}{[illegible]} \times 320$ | *160* | |
| துறை 'இ'க்கு $\frac{2,000}{[illegible]} \times 40$ | *160* | *380* |
| நிலையான செலவுகள் $= \frac{20000}{20000} \times (60 + 80 + 40)$ | | *360* |
| இலாபம் *(25%)* | | *6,240* |
| $\left\{6210 \times \frac{25}{75}\right\}$ | | *2,080* |

**குறிப்பு**

மறைமுக மாறுபடும் செலவு விகிதம்

ரூ . 5,600

துறை 'அ' 4,000மணி

ஒரு நேரிடை உழைப்பிற்கு ஒரு மணிக்கு = ரூ1.25

ரூ.6,000

துறை 'ஆ' = *3,000*மணி

ஒரு நேரிடை உழைப்பிற்கு ஒரு மணிக்கு = ரூ.2.00

**மறைமுக மாறுபடாச் செலவு விகிதம்**

ரூ.7,500

= = ரூ.075

10,000 மணிக்கு

**குறிப்பு:-**

இலாப விகிதம் கணக்கிடுதல்

$$= \frac{\text{இலாபம்}}{\text{மொத்த அடக்கவிலை}} \times 100$$

$$= \frac{570}{4,180} \times 100$$

= 13.6% (அடக்கத்தில்)

**எடுத்துக்காட்டு : 2**

குறிப்பு

ஒரு தொழிற்சாலைப் பதிவுகளிலிருந்து பணி எண்.403 என்ற பணிக்கு கீழ்க்காணும் விவரங்களை சேகரிக்கப்பட்டுள்ளன.

நேரடி மூலப்பொருள் ரூ.5,000

கூலிகள்

துறை 'அ' க்கு 60 மணிக்கு: ரூ.3 வீதம்

துறை 'ஆ' க்கு 80 மணிக்கு: ரூ.2 வீதம்

துறை 'இ' க்கு 40 மணிக்கு: ரூ.4 வீதம்

மேற்செலவுகள்

மாறக்கூடிய மேற்செலவுகள்

துறை 'அ' க்கு ரூ.*5,000-5,000* உழைப்பு மணிக்கு

துறை 'ஆ' க்கு ரூ.3,000-1,500 உழைப்புமணிக்கு

துறை 'இ' க்கு ரூ.2,000-500 உழைப்பு மணிக்கு

நிலையான செலவுகள் *10,000* பணி மணிகளுக்கு ரூ.*20,000*

மேற்கண்ட விவங்களிலிருந்து பணி எண்.403-ன் அடக்கவிலையை கண்டு பிடிக்கவும். மேலும் விற்பனை விலையில் இலாபம்; *25%* என்க் கொள்க.

விடை **பணி ஆணை அடக்கவிலைக் குறிப்பு**

**(பணி எண்:105)**

| விபரம் | ரூ. | ரூ. |
|---|---|---|
| நேரடி மூலப்பொருள்கள் | | *5,000* |
| **கூலிகள்** | | |
| துறை 'அ'க்கு *(60 x 3)* | *180* | |
| துறை 'ஆ' க்கு *(80 x 2)* | *160* | |
| துறை 'இ'க்கு *(40 x 4)* | *160* | *500* |
| **மேற் செலவுகள்** | | |
| துறை 'அ'க்கு $\frac{5,000}{5,000} \times 60$ | *60* | |
| துறை 'ஆ'க்கு $\frac{3000}{1,500} \times 80$ | *160* | |
| துறை 'இ'க்கு $\frac{2,000}{500} \times 40$ | *160* | *380* |
| நிலையான செலவுகள் $= \frac{20,000}{10,000} \times (60 + 80 + 40)$ ∴அதாவது =(2 x 180) | | *360* |
| இலாபம் *(25%)* | | *6,240* |
| Ƕ240 × $\frac{25}{75}$H | | *2,080* |
| விற்பனை விலை | | *8,320* |

குறிப்பு

**எடுத்துக்காட்டு:3**

பணி எண் 58-ல் இருந்து பின்வரும் விவரங்கள் தெரிவிக்கப்பட்டுள்ளன. இவற்றைக் கொண்டு ஒரு பணி ஆணை அடக்கவிலைக் குறிப்பு தயார் செய்யவும்.

| **விவரங்கள்** | **துறைகள்** | | |
|---|---|---|---|
| | அ | ஆ | இ |
| நேரடி மூலப்பொருள்கள் | *8,000* | *1,000* | *500* |
| உழைப்பு மணிகள் | *1,000* | *2,000* | *5,000* |
| உழைப்பு மணி ஒன்றுக்கு கூலி | *1.00* | *1.50* | *2.00* |
| கழிவுப் பொருள்கள் விற்பனை | *1,000* | *150* | *100* |
| மொத்த மறைமுக செலவுகள் | *10,000* | *15,000* | *25,000* |
| மாதம் உழைக்கும் நேரம் | *10,000* | *30,000* | *40,000* |

**தீர்வு:**

**பணி அடக்கவிலைக் குறிப்பு**

**(பணி எண்:58)**

| விபரம் | ரூ. | ரூ. |
|---|---|---|
| நேரடி மூலப்பொருள்கள் | | *5,000* |
| கழிவு விற்பனை நீக்கு | | |
| துறை 'அ' | *7,000* | |
| துறை 'ஆ' | *850* | |
| துறை 'இ' | *400* | *8,250* |
| நேரடிக் கூலி | | |
| துறை 'அ' *(1,000 x 1)* | *1,000* | |
| துறை 'ஆ' *(2,000 x 1.50)* | *3,000* | |
| துறை 'இ' *(5,000 x 2)* | *10,000* | *14,000* |
| பிரதம அடக்கவிலை | | *22,250* |
| மறைமுக செலவுகள் | | |
| துறை 'அ' | *1,000* | |
| துறை 'ஆ' | *1,000* | |
| துறை 'இ' | *3,125* | *5,125* |
| மொத்த அடக்கவிலை | | *27,375* |

**குறிப்பு**

றை 'அ' = $\frac{10,000}{10,000}$ x 1,000 = ரூ.1,000

துறை 'ஆ' = $\frac{15,000}{30,000}$ x 2,000 = ரூ.1,000

துறை 'இ' = $\frac{25,000}{40,000}$ x 5,000 = ரூ.3,125

**எடுத்துக்காட்டு:4**

பின்வரும் விவரங்களைக் கொண்டு 2006 டிசம்பர் 31-ம் தேதி முடிய ஓர் பணி ஆணை அடக்கவிலைக் குறிப்புத் தயார் செய்க.

| விவரம் | ரூ. |
|---|---|
| நேரடி மூலப்பொருள் | 30,000 |
| நேரடிக் கூலி | 40,000 |
| நேரடிச் செலவுகள் | 10,000 |
| தொழிற்சாலை மறைமுகச் செலவுகள் | 20,000 |
| விற்பனை மற்றும் பகிர்ந்தளிக்கும் செலவுகள் | 20,000 |
| நிர்வாக மேற்பார்வைச் செலவுகள் | 30,000 |
| விற்பனை விலை (இந்த பணிக்கு) | 1,80,000 |

மூலப்பொருள், கூலி, நேரிடைச் செலவுகள் முறையே ரூ.50,000, ரூ.70,000, ரூ.2,000என எடுத்து எழுதவும்.

**தீர்வு :**

31.12.06 முடிய பணிஅடக்கவிலைக் குறிப்பு

| விபரம் | ரூ |
|---|---|
| நேரடி மூலப்பொருகள் | 30,000 |
| நேரடி உழைப்பு | 40,000 |
| நேரடி செலவு | 10,000 |
| **முதன்மை அடக்கவிலை** | 80,000 |
| தொழிற்சலை மேற்செலவு | 20,000 |
| **தொழிற்சாலை அடக்கவிலை** | 1,00,000 |
| நிர்வாக மேற்செலவு | 30,000 |
| **மொத்த அடக்கவில்லை** | 1,30,000 |
| விற்பனை பகர்ந்தளக்கும் செலவு | 20,000 |
| **விற்பனை அடக்கவிலை** | 1,50,000 |
| இலாபம் | 30,000 |
| **விற்பனை விலை** | 1,80,000 |

**எடுத்துக்காட்டு:5**

2006 டிசம்பர் 31-இல் முடிவான ஆண்டின் கீழ்க்கண்ட தகவல்களின் அடிப்படையில் ஓர் பணி ஆணை அடக்கவில்லைக் குறிப்பு தயார் செய்க.

குறிப்பு

| விவரம் | நிறைவு பெற்ற பணிகள் ரூ. | வேலை முற்றாப் பணிகள் ரூ. |
|---|---|---|
| பண்டகத்திலிருந்து தரப்பட்ட மூலப்பொருள்கள் | 90.000 | 30.000 |
| கூலிகள் | 1.00,000 | 40.000 |
| நேரடி செலவுகள் | 10,000 | 4,000 |
| வேலை முற்றாப் பணிக்கு மாற்றப்பட்ட மூலப்பொருள்கள் | 2,000 | 2,000 |
| பண்டகத்திற்கு திருப்பப்பட்ட நேரடி மூலப்பொருள்கள் | 1,000 | - |

தொழிற்சாலை மேற்செலவுகள் கூலிகளில் 80%-ம் அலுவலக மேற்செலவு தொழிற்சாலை அடக்கவிலையில் 25% கணக்கிடவும். மேலும் 2006-ம் ஆண்டு நிறைவேற்றப்பட்ட மொத்த மதிப்பு ரூ.4,10.000 ஆகும்.

**பணி வேலை முற்றிய பணிக் கணக்கு**

| | ரூ. | | ரூ. |
|---|---|---|---|
| நேரடி மூலப்பொருள் பண்டகத்தில் இருந்து பெற்றது 90,000<br>கழி:வேலை முற்றாப் பணிக்கு மாற்றிய 2,000<br>88,000<br>கழி:பண்டகத்திற்கு திருப்பி அனுப்பியது 1,000 | 87,000 | ஒப்பந்த நிலை | 4,10,000 |
| கூலிகள் | 1,00,000 | | |
| நேரடி செலவுகள் | 10,000 | | |
| தொழிற்சாலை மேற்செலவு 80% | 80,000 | | |
| தொழிற்சாலை அடக்குவிலை | 2,77,000 | | |
| அலுவலக மேற்செலவு $2,77,000 \times \frac{25}{100} = 69,250$ | 69,250 | | |
| இலாபம் | 63,750 | | |
| | 4,10,000 | | 4,10,000 |

4. அடியிற்கண்ட விவரங்களை கொண்டு ஓர் பணி அடக்கவிலையை கண்டுபிடி

அ) தீர்மானிக்கப்பட்ட நேரடி மூலப்பொருளின் மதிப்பு ரூ.50,000 உழைப்பு நேரம் 10,000

ஆ) பொருளை உற்பத்த செய்ய

இயந்திரம் 'அ' விற்கு 6 மணி நேரமும் தேவைப்படுகிறது.

இ) இயந்திரமணி

ஈ) மொத்த நேரிடை கூலி ரூ.8,00,000

தொழிற்சாலை மேற்செலவு ரூ.4,80,000

உ) கடந்த ஆண்டு தொழிற்சாலை அடக்கவிலை ரூ.25,00,000

குறிப்பு

அலுவலக செலவுகள் ரூ.*3,75,000*

ஊ) இலாபம் பணி விற்பனை விலையில் *20%* எனக் கொள்க.

5. ஒரு தொழிற்சாலை பணி அடக்கவிலை முறையை பின்பற்றி வருகிறது. டிசம்பர் 2005-ம் ஆண்டு ஏற்பட்ட செலவுகள் பின்வருமாறு:

| விவரம் | ரூ. |
|---|---|
| நேரடி மூலப்பொருள் | *90,000* |
| நேரடி உழைப்பு | *75,000* |
| தொழிற்சாலை மேற்செலவுகள் | *45,000* |
| நிர்வாக மேற்செலவுகள் | *52,500* |
| விற்பனை மற்றும் பகிர்ந்தளிக்கும் செலவுகள் | *60,900* |

2006-ம் ஆண்டு ஒரு பணி ஆணை கிடைக்கிறது. இதற்கு தேவைப்படும் மூலப்பொருள் ரூ.*1,20,000*: உழைப்பு ரூ.*75,000*: விற்பனை மற்றும் பகிர்ந்தளிக்கும் செலவுகள் *15%* அதிகரித்து இருக்கின்றன.

மேற்கண்ட விவரங்களிலிருந்து *2006*-ம் ஆண்டு பணிக்கு ஓர் பணி அடக்கவிலையை கண்டுபிடி.

(விடை: பணி ஆணை அடக்கவிலை ரூ.*4,28,400)*

6. டிசம்பர் *31, 2006* முடிய விவரங்கள் கீழே தரப்பட்டுளளது. இவற்றைக் கொண்டு பணியின் இலாபத்தைக் கண்டுபிடி.

| விவரம் | வேலை முற்றுப் பெற்ற பணி ரூ. | வேலை முற்றாப் பணி ரூ. |
|---|---|---|
| நேரடி மூலப்பொருள் பண்டத்திலிருந்து பெற்றது | *18,000* | *6,000* |
| நேரடி கூலி | *20,000* | *8,000* |
| நேரடி மூலப்பொருள் வேலை முற்றாப் பணிக்கு மாற்றப்பட்டது | *400* | *400* |
| நேரடி செலவு | *2,000* | *800* |
| மூலப்பொருள்பண்டகத்திற்குதிருப்பு அனுப்பியது | *200* | |
| தொழிற்சாலை மேற்செலவு *20%* நேரடி கூலியில் கணக்கிடவும் | | |
| அலுவலக மேற்செலவு *25%* தொழிற்சாலை அடக்கத்தில் கணக்கிடவும் | | |
| பணியின் அடக்கவிலை | *82,000* | |

விடை: இலாபம் ரூ.*12,750);*

**வழிமுறை அடக்கவிலைக் கணிப்பு**

உற்பத்திப் பொருளின் அடக்க விலையினை ஒவ்வொரு வழிமுறையிலும் *(Process)* இயக்கத்திலும் அல்லது உற்பத்தியின் நிலைகளிலும் கண்டுபிடிக்க தொழிற்சாலைகளில் வழிமுறை அடக்கவிலைக் கணிப்பு *(Process Costing)*

குறிப்பு

பயன்படுத்தப்படுகிறது. இம்முறையானது கீழ்க்கண்ட தன்மைகளைக் கொண்ட வழிமுறைகளில் பயன்படுத்தப்படுகிறது.

அ) ஒரு உற்பத்திப் பொருளானது ஒரே ஒரு வழிமுறையில் *(One Single Process)* உற்பத்தி செய்யப்படும்போது.

ஆ) ஒரு வழி முறையின் உற்பத்தி பொருளானது அடுத்த வழிமுறையின்கச்சாப் பொருளாகும்போது.

இ) ஒன்று அல்லது அதிகமான வழிமுறைகளில் பல்வேறு உற்பத்திப் பொருட்கள் ஒரே சமய *(simultaneous)* உற்பத்தியில் துறை உற்பத்திப் பொருட்களுடனோ *(By-Products)* அல்லது அவைகள் இல்லாமலோ உறபத்தி செய்யப்படும்போது.

கீழ்க்கண்ட தொழிற்சாலைகளுக்கு இம்முறை பொருத்தமானது.

அ) இரசாயன தொழிற்கூடங்கள்

ஆ) நெசவு ஆலைகள் (பருத்தி, சணல் கம்பளி)

இ) பழம் பதனிடுதல்

ஈ) நிலக்கரி ஆலை

உ) தோல் பதனிடுதல்

ஊ) எண்ணெய் சுத்திகரிப்பு

எ) காகித ஆலை

ஏ) சோப் தயார்

## 5.7 வழிமுறை அடக்கவிலைக் கணிப்பின் அடிப்படைக் கொள்கைகள்

1. பொருட்கள், உழைப்பு மற்றும் செலவுகளின் அடக்கவிலை குறிப்பிடட காலத்தில் ஒவ்வொரு வழிமுறைக்கும் சேர்க்கப்படுகின்றது.
2. அந்த குறிப்பிட்ட காலத்தில் அலகுகளின் அளவில் உற்பத்தியினைக் கண்டுபிடிக்க உற்பத்திப் பதிவுகள் *(Production Records)* வைக்கப்படுகின்றன.
3. ஒரு குறிப்பிட்ட காலத்தின் வழிமுறையின் மொத்த அடக்கவிலையானது *(Total cost of Process)* அக்காலத்தில் உற்பத்தி செய்யப்பட்ட அலகுகளின் எண்ணிக்கையால் வகுக்கப்பட்டு ஒவ்வொரு அலகுக்குமான அடக்கவிலை ஆகியவை கருத்தில் கொள்ளப்பட வேண்டும்.
4. ஒரு முறையின் உற்பத்திப் பொருளானது *(output)* அடுத்த முறையின் உட்செலுத்தப் பொருளாக *(Input)* மாற்றப்படுகிறது.

மேற்கூறிய கொள்கைகளின் அடிப்படையில் வழிமுறை அடக்க விலையைக் கணக்கிடுவது எளிது. எனினும் ஒரு அடக்கவிலைக் கணக்கர் அடக்கவிலையைக் கணக்கிடும்போது.

**கீழ்க்கண்ட பிரச்சினைகளைச் சந்திக்க வேண்டியிருக்கிறது.**

அ) வழிமுறையின் நட்டங்கள் மற்றும் லாபங்கள்

ஆ) வழிமுறையின் ஆரம்பம் *(Process Opening)* மற்றும் இறுதியில் உள்ள

குறிப்பு

முன்னேற்றத்திலுள்ள வேலைகள் மதிப்பீடு

இ) இடை வழிமுறைகள் *(Inter Process)*

ஈ) வழிமுறை நட்டங்கள், மற்றும் இறுதி இருப்புச்சரக்குகள் இல்லாதபோது வழிமுறை அடக்கவிலை கணிப்பு.

**எடுத்துக்காட்டு:6**

| | | வழிமுறைகள் *(Process)* | | | |
|---|---|---|---|---|---|
| அடக்கவிலைக் கூறுகள் *(Elements of cost)* | மோத்தம் ரூ. | அ ரூ. | ஆ ரூ. | இ ரூ. | ஈ ரூ. |
| நேரடிப் பொருட்கள் | *26,000* | *15,000* | *4,000* | - | *7,000* |
| நேரடி உழைப்பு | *26,500* | *2,500* | *3,000* | *9,000* | *12,000* |
| நேரடி செலவுகள் | *8,000* | *1,000* | - | *2,000* | *5,000* |
| உற்பத்திச் செயலமைப்புச் செலவுகள் | *79,200* | - | - | - | - |

நேரடி கூலியின் *(300%)* அடிப்படையில் உற்பத்தி செயலமைப்புச் செலவானது. வழிமுறைகளால் கிரகிக்கப்படுகிறது.அக்காலத்தில் உற்பத்தி *1,000* டன்கள்.

**வழிமுறை 'அ' கணக்கு**

| | **ஒரு டன்னுக்கான அடக்கவிலை** | **மொத்தம்** | | **ஒரு டன்னுக்கான அடக்கவிலை** | **மொத்தம்** |
|---|---|---|---|---|---|
| | ரூ. | ரூ. | | ரூ. | ரூ. |
| நேரடிப் பொருட்கள் | *15.00* | *15,000* | | | |
| நேரடி உழைப்பு | *2.50* | *2,500* | வழிமுறை 'ஆ' வுக்கு மாற்றப்பட்ட உற்பத்திப் பொருள் | | |
| நேரடிச் செலவுகள் | *1.00* | *1,000* | | *26.00* | *26,000* |
| உற்பத்தி செயலமப்புச் செலவு நேரடிக் கூலியின் 300%) | *7.50* | *7,500* | | | |
| | *26.00* | *26,000* | | *26.00* | *26,000* |

குறிப்பு

### வழிமுறை 'ஆ கணக்கு

| | ஒரு டன்னுக்கான அடக்கவிலை | மொத்தம் | | ஒரு டன்னுக்கான அடக்கவிலை | மொத்தம் |
|---|---|---|---|---|---|
| | ரூ. | ரூ. | | ரூ. | ரூ. |
| வழிமுறை 'அ' லிலிருந்து மாற்றப்பட்ட உற்பத்திப் பொருள் | *26.00* | *26,000* | வழிமுறை 'இ' வுக்கு மாற்றப்பட்ட உற்பத்திப் பொருள் | *42.00* | *42,000* |
| நேரடிப் பொருட்கள் | *4.00* | *4,000* | | | |
| நேரடி உழைப்பு | *3.00* | *3,000* | | | |
| உற்பத்தி செயலமைப்புச் செலவு நேரடிக் கூலியின் 300%) | *9.00* | *9,000* | | | |
| | *42.00* | *42,000* | | *42.00* | *42,000* |

### வழிமுறை 'இ' கணக்கு

| | ஒரு டன்னுக்கான அடக்கவிலை | மொத்தம் | | ஒரு டன்னுக்கான அடக்கவிலை | மொத்தம் |
|---|---|---|---|---|---|
| | ரூ. | ரூ. | | ரூ. | ரூ. |
| வழிமுறை 'ஆ' லிலிருந்து மாற்றப்பட்ட உற்பத்திப் பொருள் | *42.00* | *42,000* | வழிமுறை 'ஈ' வுக்கு மாற்றப்பட்ட உற்பத்திப் பொருள் | *80.00* | *80,000* |
| நேரடிப் உழைப்பு | *9.00* | *9,000* | | | |
| நேரடி செலவுகள் | *2.00* | *2,000* | | | |
| உற்பத்தி செயலமைப்புச் செலவு நேரடிக் கூலியின் 300%) | *27.00* | *27,000* | | | |
| | *80.00* | *80,000* | | *80.00* | *80,000* |

குறிப்பு

வழிமுறை ஈ கணக்குகள்

| | ஒரு டன்னுக்கான அடக்க விலை | மொத்தம் | | ஒரு டன்னுக் கான அடக்க விலை | மொத்தம் |
|---|---|---|---|---|---|
| | ரூ. | ரூ. | | ரூ. | ரூ. |
| வழிமுறை 'இ' லிலிருந்து | | | முடிக்கப்பட்ட சரக்குகள்(க/கு) | | |
| மாற்றப்பட்ட உற்பத்திப் பொருள் | *80.00* | *80,000* | | *140.00* | *1,40,000* |
| நேரடிப் பொருள்கள் | *7.00* | *7,000* | | | |
| நேரடி உழைப்பு | *12.00* | *12,000* | | | |
| நேரடி செலவுகள் | *5.00* | *5,000* | | | |
| உற்பத்தி செயலமைப்புச் செலவு | | | | | |
| நேரடிக் கூலியின் 300%) | *36.00* | *36,000* | | | |
| | *140.00* | *1,40,000* | | *140.00* | *1,40,000* |

## 5.8 வழிமுறை அடக்கவிலைக் கணிப்பின் (Process Costing) நட்டங்களை கையாளுதல்

வழிமுறைத் தொழிற்சாலைகளில் சில நட்டங்கள், துகள்கள் மற்றும் வீண்கள் தவிர்க்க இயலாதவை. உற்பத்தி முறையில் உள்ள இந்த தவிர்க்க இயலாத உள்ளடங்கிய (*Inherent*) நட்டங்கள் இயல்பான நட்டங்கள் *(Normal Loss)* எனப்படுகிறது. ஆனால் எதிர்பார்க்காத அல்லது வழக்கமற்ற நிலைகளினால் ஏற்படும் நட்டங்கள் இயல்பற்ற நட்டங்கள் *(Abnormal Loss)* ஆகும்.

எல்லா இயல்பான நட்டங்களும் உற்பத்தி செய்யப்பட்ட சிறந்த அலகுகளால் கிரகிக்கப்பட வேண்டும். இயல்பற்ற நட்டங்கள் சிறந்த அலகுகளைப் போலவே மதிப்பிடப்பட்டு உற்பத்தி முறைக்காணக்கிலிருந்து *(Process Account)* இயல்பற்ற நட்டக் கணக்கிற்கு மாற்றப்படுகின்றன. இயல்பான நட்டமான துகள்கள் சிறிது பொறுமான மதிப்புள்ளவை *(Realisable Value)*. இவற்றின் பெறுமானமானது மதிப்பிடப்பட்ட பெறுமான விலைகளில் உற்பத்தி முறைக் கணக்கில் வரவு வைக்கப்படுகிறது. இயல்பற்ற நட்டத்தைப் பிரதிபலிக்கும் துகள்களின் பெறுமான மதிப்பானது இயல்பற்ற நட்டக்கணக்கில் வரவு வைக்கப்படுகிறது. இயல்பற்ற நட்டக்கணக்கின் மீதி இருப்பானது அடக்கவிலை லாப நட்டக் கணக்கிற்கு மாற்றப்படுகிறது.

குறிப்பு

சில சமயங்களில் உண்மையான உற்பத்தியானது எதிர்க்கப்பட்ட உற்பத்தியைக் காட்டிலும் அதிகமாக இருக்கும். இவ்வேறுபாடு இயல்பற்ற லாபம் (*Abnormal Gain*) எனப்படும். இயல்பற்ற லாபத்தின் அலகுகள் வழிமுறையின் இயல்பான அடக்கவிலையில் (*Normal Cost of the Process*) மதிப்பிடப்பட்டு, சம்மந்தப்பட்ட வழிமுறைக் கணக்கை பற்று செய்வது மூலம் இயல்பற்ற லாபக்கணக்கு வரவு வைக்கப்படுகின்றன.

**வழிமுறைக் கணக்கின் படிகள்-நட்டத்தைக் கையாளுதல்:-**

**1. உற்பத்தி முறையின் இயல்பான உற்பத்தியை (அலகு) கண்டுபிடி.**

இயல்பான உற்பத்தி (அலகுகள்) = உட்செலுத்த பொருள் (அலகுகள்)-இயல்பான நட்டம் (அலகுகள்).

**2.இயல்பான உற்பத்தியின் மொத்த அடக்கவிலையைக் காண்க.**

மொத்த அடக்கவிலை-இயல்பான நட்ட பெறுமான மதிப்பு = மொத்த இயல்பான அடக்கவிலை.

இதில்:

மொத்த அடக்கவிலை = உட்செலுத்தப் பொருளின் அடக்கவிலை + வழிமுறைப் பொருட்கள் அடக்கவிலை + உழைப்பு அடக்கவிலை + செலவுகள்

**3. அலகுக்கான இயல்பான அடக்கவிலையைக் காண்க**

மொத்த இயல்பான அடக்கவிலை =அலகுக்கான இயல்பான அடக்கவிலை

இயல்பான உற்பத்தி (அலகுகள்)

**4. இயல்பற்ற நட்டம் (அலகுகள்) அல்லது இயல்பற்ற லாபம் (அலகுகள்) ஆகியவற்றைக் கணக்கிடுக.**

இயல்பற்ற நட்டம் (அலகுகள்) = இயல்பற்ற உற்பத்தி (அலகுகள்)-உண்மையான உற்பத்தி (அலகுகள்).

| விவரம் | அலகுகள் ரூ. | தொகை ரூ. | விவரம் | அலகுகள ரூ. | தொகை ரூ. |
|---|---|---|---|---|---|
| உட்செலுத்திய மூலபொருட்கள் | 200 | *4,000* | இயல்பான நட்டம் | 20 | 120 |
| கூலி | | *2,000* | *10% = (20 x 6)* | | |
| உற்பத்தி மேற்செலவு | | *408* | பொருட்கள் விற்பனை மதிப்பு ரூ.6 வீதம் | | |
| | | | இயல்பற்ற நட்டம் | *30* | *1,048* |
| | | | வழிமுறை | *150* | *5,240* |
| | *200* | *6,048* | உற்பத்திச் செலவு | *200* | *6,048* |

மொத்த அடக்கவிலை = ஒரு அலகுக்ககான இயல்பான அடக்கவிலை

இயல்பான உற்பத்தி

**எடுத்துக்காட்டு:7**

ஒரு பொருளின் 400 அலகுக்கான உற்பத்திக் செலவு ரூ.*11,200* கீழ்க்கண்டவாறு இருக்கிறது.

மூலப்பொருட்கள் ரூ.*6,000*

கூலி ரூ.*4,000*

செயலமைப்புச் செலவுகள் ரூ.*1,200*

உற்பத்தியில் *10%* இயல்பான நட்டம் ஆகும். உற்பத்தியில் வீணான அலகுகள் 10 வீதம் விற்கப்படுகின்றன. வழிமுறைக் கணக்கு ஒன்றைத் தயார் செய்து உற்பத்தியாளர் பொருட்களின் ஒரு அலகுக்கான அடக்க விலையைக் கணக்கிடுக.

**தீர்வு:-**

**வழிமுறைக் கணக்கு**

| விவரம் | அலகுகள் ரூ. | தொகை ரூ. | விவரம் | அலகுகள ரூ. | தொகை ரூ. |
|---|---|---|---|---|---|
| மூலப் பொருட்கள் (ரூ.15 வீதம்) | 400 | *6,000* | இயல்பான நட்டம் | 40 | 40 |
| கூலி | | *4,000* | *(400% 10%) = 40 x 10)* | | |
| செயலமைப்புச் செலவுகள் | | *1,200* | உற்பத்தியான பொருட்களின் அடக்கவிலை ரூ.30 வீதம் | *360* *900* | *10,800* |
| | *400* | *11,200* | | *400* | *11,200* |

**குறிப்பு:** வீணான பொருட்கள் அலகு ஒன்று ரூ.10 வீதம் விற்கப்படாவிடின் உற்பத்தியாளர் (360 பொருட்கள்) பொருட்களின் விலை அலகு ஒன்றுக்கு *11,200 ÷ 360 =* ரூ.*360* ஆகும்.

**எடுத்துக்காட்டு:8**

வழிமுறை *'X'*-இல் ரூ.*4,000* மதிப்புள்ள *200* அலகுகள் உட்செலுத்தப்படுகின்றன. கூலி ரூ.*2,000* மற்றும் உற்பத்தி மேற்செலவுகள் ரூ.*408* வழிமுறையில் ஏற்படுகிறது. உட்செலுத்திய பொருட்களில் *10%* இயல்பான நட்டம் எனக் கணிக்கப்படுகிறது. அதனால் ஏற்படும் கழிவுப் பொருட்களை அலகு ஒன்றுக்கு ரூ.*6* வீதம் விற்பனை செய்யப்படுகிறது. வழிமுறையில் உற்பத்தி செய்த பொருட்களின் எண்ணிக்கை 150ஆகும். வழிமுறை *'X'* கணக்கை தயாரிக்கவும்.

**வழிமுறை 'X' கணக்கு**

| விவரம் | அலகுகள் ரூ. | தொகை ரூ. | விவரம் | அலகுகள ரூ. | தொகை ரூ. |
|---|---|---|---|---|---|
| உட்செலுத்திய மூலபொருட்கள் | 200 | *4,000* | இயல்பான நட்டம் | 20 | 120 |
| கூலி | | *2,000* | *10% = (20 x 6)* | | |
| உற்பத்தி மேற்செலவு | | *408* | பொருட்கள் விற்பனை மதிப்பு ரூ.6 வீதம் | | |
| | | | இயல்பற்ற நட்டம் | *30* | *1,048* |
| | | | வழிமுறை உற்பத்திச் செலவு | *150* | *5,240* |
| | *200* | *6,048* | | *200* | *6,048* |

குறிப்பு

**குறிப்பு:**

| இயல்பற்ற நட்டம் | அலகுகள் |
|---|---|
| அலகுகள் செலுத்தப்பட்டது | 200 |
| கழி: வழக்கமான நட்டம் | 20 |
| இயல்பான உற்பத்தி | 180 |
| உண்மையான உற்பத்தி | 150 |
| இயல்பற்ற நட்டம் | 30 |

**2. இயல்பற்ற நட்டத்தின் மதிப்பு**

$$\frac{\text{இயல்பான உற்பத்தியின் இயல்பான மதிப்பு}}{\text{இயல்பான உற்பத்தி}} \times \text{இயல்பற்ற நட்டத்தின் அலகுகள்}$$

அல்லது

$$\frac{\text{மொத்த அடக்கவிலை வீணானவைகளின் மதிப்பு}}{\text{இயல்பான உற்பத்தி}} \times \text{இயல்பற்ற நட்டத்தின் அலகுகள்}$$

$$\frac{6,408-120}{180} x30 = \frac{6288}{180} x30 = \text{ரூ}1,048$$

**இயல்பற்ற நட்டக் கணக்கு**

| விவரம் | அலகுகள் ரூ. | தொகை ரூ. | விவரம் | அலகுகள ரூ. | தொகை ரூ. |
|---|---|---|---|---|---|
| வழிமுறை 'X' கணக்கு | 30 | *1,048* | வீணான அலகுகளிலிருந்து பெற்ற தொகை<br>அடக்கவிலை இலாப நட்டக் கணக்கு | 30 | 180<br>*868* |
| | *30* | *1048* | | *30* | *1048* |

**எடுத்துக்காட்டு:9**

பொருள் '*A*'ஐ உற்பத்தி செய்வதற்காக அலகு ஒன்று ரூ.12 வீதம் *1,200* அலகுகள் முதல் வழிமுறையில் செலுத்தப்பட்டது. நேரடிக் கூலி ரூ.*3,600* மற்றும் உற்பத்தி மேற்செலவுகள் எதிர்பார்க்கப்படுகிறது. உண்மையான உற்பத்தி 110 அலுகுகளாகும். வழிமுறை கணக்கையும் இயல்பற்ற இலாபக்கணக்கையும் தயார் செய்க.

குறிப்பு

**தீர்வு**

**வழிமுறை 'X' கணக்கு**

| விவரம் | அலகுகள் ரூ. | தொகை ரூ. | விவரம் | அலகுகள ரூ. | தொகை ரூ. |
|---|---|---|---|---|---|
| உட்செலுத்திய மூலபொருட்கள் | *1,200* | *14,400* | இயல்பான நட்டம் | 120 | 360 |
| கூலி | | *36,000* | இரண்டாவது வழிமுறைக்கு அனுப்பிய அலகுகள் | *1,110* | *19,980* |
| உற்பத்தி மேற்செலவு | | *1,800* | | | |
| இயல்பற்ற இலாபம் | *30* | *540* | | | |
| | *1,230* | *20,340* | | *1,230* | *20,340* |

குறிப்பு:

**1.இயல்பற்ற இலாபத்தைக் கணக்கிடல்** **அலகுகள்**

| | | |
|---|---|---|
| இயல்பான உற்பத்தி அலகுகள் (1200-120) | = | *1,080* |
| உண்மையான உற்பத்தி | = | *1,110* |
| இயல்பற்ற இலாபம் | = | *30* |

மொத்தஅடக்கவிலை வீணானவைகளின் மதிப்பு$x$இயல்பற்ற நட்டத்தின்அலகுகள்

இயல்பான உற்பத்தி

$= \frac{19,800-360}{1,080} = \frac{19,440}{1,080}$ =ரூ.18

3.இயல்பற்ற இலாபத்தின் மதிப்பு

(ரூ.*18 x 30)* = ரூ.540

4. இயல்பற்ற இலாபக் கணக்கில் ரூ.540 வரவு வைக்கப்படுகிறது. வீணானவைகளிலிருந்து கிடைத்த தொகை *(30 x 3)* = ரூ.90 பற்று வைக்கப்படுகிறது. நிகர இயல்பற்ற இலாபம் அடக்கவிலை இலாப நட்டக் கணக்கிற்கு மாற்றப்படுகிறது.

**இயல்பற்ற இலாபக் கணக்கு**

| விவரம் | அலகுகள் ரூ. | தொகை ரூ. | விவரம் | அலகுகள் ரூ. | தொகை ரூ. |
|---|---|---|---|---|---|
| சாதாரண நட்ட அலகுகள் மூலம் வரவேண்டிய வருமான குறைவு | *30* | *90* | வழிமுறை *"A"* க/கு | 30 | 540 |
| அடக்கிலை இலாப நட்டக் க/கு | | *450* | | | |
| | *30* | *540* | | *30* | *540* |

குறிப்பு

**எடுத்துக்காட்டு:10**

ஒரு கம்பெனியில் ஒரு பொருளை உற்பத்தி செய்து முடிப்பதற்கு மூன்று வழிமுறைகளைக் கடக்க வேண்டியிருக்கிறது. அவைகளாவன*A*,*B*, மற்றும் *C*.

கடந்த கால அனுபவத்தின்படி கீழ்க்கண்டவாறு நட்டம் ஏற்படும் என கணக்கிடப்படுகிறது.

வழிமுறை *A-10* சதவீதம்

வழிமுறை *B-5* சதவீதம்

வழிமுறை *C-10* சதவீதம்

ஒவ்வொரு வழிமுறையிலும் மேற்குறித்திட்ட நட்டம் உட்செலுத்திய பொருட்களின் எண்ணிக்கையை அடிப்படையாக வைத்து கண்க்கிடப்படுகிறது. ஒவ்வொரு வழிமுறையிலும் பெறப்படுகிறது. வழிமுறை *A*-யிம் வீணானவைகளை அலகு ஒன்று ரூ.15 வீதமும். வழிமுறை ட-யில் வீணானவைகளை அலகு ஒன்று ரூ.*15* வீதமும். வழிமுறை வீணானவைகளை அலகு ஒன்று ரூ.30 வீதமும் விற்கப்படுகிறது.

ஒவ்வொரு வழிமுறையிலும் வெளியாகும் அலகுகள் அடுத்துள்ள வழிமுறைக்கு உடனே அனுப்பப்பட்டு வழிமுறை ஊ-யில் பொருட்கள் முழுமையாக உற்பத்தி செய்யப்பட்டு சரக்கறைக்கு அனுப்பப்படுகிறது. இதர விவரங்கள

| | வழிமுறை | வழிமுறை | வழிமுறை |
|---|---|---|---|
| | *A* | *B* | *C* |
| மூலப்பொருட்கள் | *10,000* | *15,100* | *17,310* |
| கூலி | *15,000* | *20,000* | *25,000* |
| உற்பத்தி மேற்செலவுகள் | *10,000* | *11,130* | *12,500* |

வழிமுறை '*A*'யில் ஒன்று ரூ.25 மதிப்புள்ள *1,000* அலகுகள் உட்செலுத்தப்படுகின்றன.

ஒவ்வொரு வழிமுறையில் உற்பத்திப் பொருட்களின் எண்ணிக்கை கீழ்க்கண்டவாறு உள்ளன.

குறிப்பு

வழிமுறை *A920;* வழிமுறை *B870*: வழிமுறை ஊ800: வழிமுறைகளில் முற்றுபெறாத பொருட்களோ அல்லது சரக்கிருப்போ ஏதும் இல்லை என விபரங்களை மனதில் கொண்டு வழிமுறைக் கணக்குகளைத் தயார் செய்க.

**தீர்வு:**

**வழிமுறை 'A' கணக்கு**

| விவரம் | அலகுகள் ரூ. | தொகை ரூ. | விவரம் | அலகுகள் ரூ. | தொகை ரூ. |
|---|---|---|---|---|---|
| உட்செலுத்திய பொருட்கள் | *1,000* | *25,000* | இயல்பான நட்டம் ரூ.15 வீதம் 100 அலகுகள் | | |
| மூலபொருட்கள் | | *10,000* | வீதம் 100 அலகுகள் | 100 | *1,500* |
| கூலி | | *15,000* | வழிமுறை *'B*'க்கு அனுப்பியது | *920* | *59,800* |
| உற்பத்திமேற் செலவுகள் | | *10,000* | அனுப்பிய அலகுகள் | *1,110* | *19,980* |
| இயல்பற்ற இலாபம் | *20* | *1,300* | | | |
| | *1,020* | *61,300* | | *1,020* | *61,300* |

**வழிமுறை 'B' கணக்கு**

| விவரம் | அலகுகள் ரூ. | தொகை ரூ. | விவரம் | அலகுகள ரூ. | தொகை ரூ. |
|---|---|---|---|---|---|
| வழிமுறை 'A' யிலிருந்து பெறப்பட்டது | *920* | *59,800* | இயல்பான நட்டம் *(46 * 25 &)* | 46 | *1,150* |
| மூலபொருட்கள் | | *15,100* | இயல்பற்ற நட்டம் | 4 | *480* |
| கூலி | | *20,000* | வழிமுறை *'C*'க்கு அனுப்பியது | *870* | *1,04,400* |
| உற்பத்திமேற் செலவுகள் | | *11,130* | | | |
| | *920* | *1,06,030* | | *920* | *1,06,030* |

குறிப்பு

**வழி முறை 'C'கணக்கு**

| விவரம் | அலகுகள் ரூ. | தொகை ரூ. | விவரம் | அலகுகள ரூ. | தொகை ரூ. |
|---|---|---|---|---|---|
| வழிமுறை *'B'*யிலிருந்து பெறப்பட்டது | 870 | *1,04,400* | இயல்பான நட்டம் *(87 x 30)* | 87 | *2,610* |
| கூலிபொருட்கள் | | *17,310* | சரக்கிருப்புக் க/கு | 800 | *1,60,000* |
| கூலி | | *25,000* | வழிமுறை *'C'*க்கு அனுப்பியது | *870* | *1,04,400* |
| உற்பத்தி மேற்செலவுகள் | | *12,500* | | | |
| இயல்பற்ற இலாபம் | *17* | *3,400* | | | |
| | *887* | *1,62,610* | | *887* | *1,62,610* |

**சரக்கிருப்பு**

| விவரம் | அலகுகள் ரூ. | தொகை ரூ. | விவரம் | அலகுகள ரூ. | தொகை ரூ. |
|---|---|---|---|---|---|
| வழிமுறை *'B'*யிலிருந்து பெறப்பட்டது | 870 | *1,04,400* | இயல்பான நட்டம் *(87 x 30)* | 87 | *2,610* |

**இயல்பற்ற இலாபக் க/கு**

| விவரம் | அலகுகள் ரூ. | தொகை ரூ. | விவரம் | அலகுகள ரூ. | தொகை ரூ. |
|---|---|---|---|---|---|
| வழிமுறை *'B'*க/கு | 4 | *480* | ரொக்கக் க/கு வீணானவைகளின் மதிப்பு *(4 x 25)* | 4 | *100* |
| | | | அடக்கவிலை இலாப நட்டக் க/கு | | *380* |
| | 4 | *480* | | 4 | *480* |

**இயல்பற்ற நட்டக் க/கு**

| விவரம் | அலகுகள் ரூ. | தொகை ரூ. | விவரம் | அலகுகள ரூ. | தொகை ரூ. |
|---|---|---|---|---|---|
| வழிமுறை *'A'*க/கு | 100 | *1,500* | இயல்பற்ற இலாபக் க/கு | 37 | *810* |
| வழிமுறை *'B'*க/கு | 46 | *1,150* | | | |
| வழிமுறை *'C'*க/கு | 87 | *2,610* | இலாப நட்டக் க/கு | 196 | *4,450* |
| | 233 | *5,260* | | 233 | *5,260* |

குறிப்பு

| விவரம் | அலகுகள் ரூ. | தொகை ரூ. | விவரம் | அலகுகள ரூ. | தொகை ரூ. |
|---|---|---|---|---|---|
| இயல்பான நட்ட க.்.கு வீணானவைகளில இருந்து கிடைக்க வேண்டிய தொகை குறைப்பு | | | வழிமுறை 'A'க/கு | 20 | *1,300* |
| வழிமுறை 'A'க/கு<br>வழிமுறை 'B'க/கு<br>அடக்கவிலை | 20<br>17 | *300*<br>*510*<br>*3,890* | வழிமுறை 'B'க/கு | 17 | *3,400* |
| இலாப நட்டக் க.்.கு1 | 37 | *4,700* | | 37 | *4,700* |

குறிப்பு:

**வழிமுறை A**

**இயல்பற்ற இலாபம்**

இயல்பான அலகுகளின் அடக்கவிலை *60,000 =* ரூ.*1,500*

' ' ானவைகளிலிருந்து கிடைத்த வருமானம்) = ரூ.*58,500*

$\frac{58{,}500}{900} \times 20$ இயல்பான உற்பத்தி = *100 – 100 = 900* அலகுகள்

இயல்பற்ற இலாபத் தொகை =ரூ.*1,300*

**வழிமுறை B**

**இயல்பற்ற நட்டம்**

இயல்பான அலகுகளின் - இயல்பான அடக்கவிலை= ரூ.*1,06,030*-ரூ.*1,150*=ரூ.*1,04,880*

இயல்பான உற்பத்தி = *920 – 46 =874* அலகுகள்

இயல்பற்ற நட்டத் தொகை $\left[\frac{1{,}04{,}880}{874}\right] \times 4$ =ரூ.*480*

**வழிமுறை C**

**இயல்பற்ற இலாபம்**

இயல்பான அலகுகளின் - இயல்பான அடக்கவிலை= ரூ.*1,59,210*-ரூ.*2,610*=ரூ.*1,56,600*

இயல்பான உற்பத்தி = *870* ்குகள்

இயல்பற்ற நட்டத் தொகை $\left[\frac{1{,}56{,}600}{783}\right] \times 17$ = ரூ.*3,400*

**எடுத்துக்காட்டு:11**

குறிப்பு

உற்பத்தி பொருள் "A" முற்றுப்பெறும்வரை மூன்று வழிமுறைகளில் செல்கிறது. உற்பத்தி அடக்க விலைகள் கீழே தரப்பட்டுள்ளன.

| அடக்கவிலைக் கூறுகள் | மொத்தம் ரூ. | வழிமுறை | | |
|---|---|---|---|---|
| | | 1 | 2 | 3 |
| | | ரூ. | ரூ. | ரூ. |
| நேரடிப் பொருட்கள் | 8,482 | 2,000 | 3,020 | 3,462 |
| நேரடி உழைப்பு | 12,000 | 3,000 | 4,000 | 5,000 |
| நேரடி செலவுகள் | 726 | 500 | 226 | - |
| உற்பத்திச் செயலமைப்புச் செலவு | 6,000 | | | |

ஒவ்வொரு வழிமுறையின் உற்பத்தி

வழிமுறை 1-920 யூனிட்கள்

வழிமுறை 2-870 யூனிட்கள்

வழிமுறை 3-800 யூனிட்கள்

ஒவ்வொரு வழிமுறைக்குமான வழக்கமான நட்டம் கீழ்க்கண்டவாறு மதிப்பிடப்படுகிறது.

வழிமுறை 1-10%
வழிமுறை 2-5% } உட்செலுத்தப் பொருளின் மீது (of input)
வழிமுறை 3-10%

ஒவ்வொரு வழிமுறையிலும் ஏற்பட்ட வியாபாரிகளுக்கு விற்கப்படக்கூடிய துகள் கீழே தரப்பட்டுள்ளது.

வழிமுறை 1 ஒரு அலகுக்கு ரூ.3

வழிமுறை 2 ஒரு அலகுக்கு ரூ.5

வழிமுறை 3 ஒரு அலகுக்கு ரூ.6

வழிமுறை 1க்கு ரூ.5 வீதம் 1000 அலகுகள் அளிக்கப்பட்டன.

காலத்தின் ஆரம்பத்திலோ அல்லது இறுதியிலோ, பொருட்கள் இருப்போ அல்லது முன்னேற்ற வேலைகளோ எத்துறையிலும் இல்லை. ஒரு வழிமுறையின் உற்பத்திப் பொருளானது நேராக அடுத்த வழிமுறைக்கு மாற்றப்பட்டு இறுதியாக முடிக்கப்பட்ட சரக்காகிறது. நேரடி உழைப்பின் 50% அடிப்படையில் உற்பத்திச் செயலமைப்புச் செலவானது ஒவ்வொரு வழிமுறையிலும் கிரகிக்கப்படுகிறது.

குறிப்பு

**வழிமுறை 1 கணக்கு**

| விபரம் | அலகுகள் | அலகுக்கானஅடக் கவிலை | தொகை | விபரம் | அலகுகள் | அலகுக்கான அடக்க விலை | தொகை |
|---|---|---|---|---|---|---|---|
| | | ரூ. | ரூ. | | | ரூ. | ரூ. |
| நுழைக்கப்பட்ட | 1000 | 5 | 5,000 | இயல்பான நட்டம் | 100 | 3 | 300 |
| நேரடிபொருள் கள் | | | 2,000 | | | | |
| நேரடிஉழைப்பு | | | 3,000 | வழிமுறைக்கு உற்பத்திப் பொருள் மாற்றப்பட்டது | 920 | 13 | 11,960 |
| நேரடிசெலவு கள் | | | 500 | பொருள் மாற்றப்பட்டது (ஒருஅலகுக்கான இயல்பானஅடக்கவிலை) | | | |
| உற்பத்த செயல் அமைப்புச் செயல்நேரடி உழைப்பில் 50% | | | 1,500 | | | | |
| வழக்கமற்ற இலாபம் (ஒருஅலகுக்கானவழக்கமான அடக்கவிலையில் | 20 | 13 | 260 | | | | |
| | 1,020 | | 12,260 | | 1,020 | | 12,260 |

குறிப்பு

**வழிமுறை 2 கணக்கு**

| விபரம் | அலகுகள் | அலகுக்கான அடக்கவிலை | தொகை | விபரம் | அலகுகள் | அலகுக்கான அடக்கவிலை | தொகை |
|---|---|---|---|---|---|---|---|
| | | ரூ. | ரூ. | | | ரூ. | ரூ. |
| வழிமுறை 1 | *920* | *13* | *11,960* | இயல்பான நட்டம் | *46* | *5* | *230* |
| நேரடி பொருள்கள் | | | *3,020* | இயல்பற்ற நட்டம் | | | |
| நேரடி உழைப்பு | | | *4,000* | (ஒரு அலகுக்கான இயல்பான அடக்கவிலையில்) | *4* | *24* | *96* |
| நேரடி செலவுகள் | | | *226* | வழிமுறைக்கு உற்பத்திப் மாற்றப்பட்டது | | | |
| உற்பத்தி செயல் அமைப்புச் | | | | (ஒரு அலகுக்கான இயல்பான அடக்கவிலை) | *870* | *24* | *20,880* |
| செலவு | | | *2,000* | | | | |
| வழக்கமற்ற இலாபம் | | | | | | | |
| | *920* | | *21,206* | | *920* | | *21,206* |

குறிப்பு

## வழிமுறை 3 கணக்கு

| விபரம் | அலகுகள் | அலகுக்கான அடக்கவிலை | தொகை | விபரம் | அலகுகள் | அலகுக்கான அடக்கவிலை | தொகை |
|---|---|---|---|---|---|---|---|
| | | ரூ. | ரூ. | | | ரூ. | ரூ. |
| வழிமுறை 1 | *870* | *24* | *20,880* | இயல்பான நட்டம் | *87* | *6* | *522* |
| நேரடி பொருள்கள் | | | *3,462* | முடிக்கப்பட்ட பொருள் (ஒரு அலகுக்கான இயல்பான அடக்கவிலையில்) | *800* | *40* | *32,000* |
| நேரடி உழைப்பு | | | *5,000* | | | | |
| உற்பத்தி செயல் அமைப்புச் செலவு | | | *2,500* | | | | |
| இயல்பற்ற லாபம் (ஒரு அலகுக்கான இயல்பான அடக்கவிலை) | *17* | *40* | *680* | | | | |
| | *887* | | *32,522* | | *887* | | *32,522* |

## இயல்பற்ற நட்டக் கணக்கு

| விபரம் | அலகுகள் | அலகுக்கான அடக்கவிலை | தொகை | விபரம் | அலகுகள் | அலகுக்கான அடக்கவிலை | தொகை |
|---|---|---|---|---|---|---|---|
| | | ரூ. | ரூ. | | | ரூ. | ரூ. |
| வழிமுறை 2 | *4* | *24* | *96* | ரொக்கம் | *4* | | *20* |
| | | | | லாப நட்ட க/கு | | | *96* |
| | *4* | | *96* | | *4* | | *96* |

குறிப்பு

## இயல்பறற் லாபக் கணக்கு

| விபரம் | அலகுகள் | அலகுக்கான அடக்க விலை | தொகை | விபரம் | அலகுகள் | அலகுக்கான அடக்க விலை | தொகை |
|---|---|---|---|---|---|---|---|
| | | ரூ. | ரூ. | | | ரூ. | ரூ. |
| வழிமுறை 1 | | | | வழிமுறை1 | 20 | 13 | 260 |
| இயல்பான நட்ட க.்.கு | 20 | 3 | 60 | | | | |
| வழிமுறை3 | | | | வழிமுறை2 | 17 | 40 | 680 |
| இயல்பான நட்ட க.்.கு | 17 | 6 | 102 | | | | |
| | 37 | | 940 | | 37 | | 940 |

## முடிக்கப்பட்ட சரக்குகள்க/கு

| விபரங்கள் | அலகுகள் | அலகுக்கான இடக்கவிலை | மோத்தம் |
|---|---|---|---|
| வழிமுறை3 | 800 | 40 | 32,000 |

**வழிமுறை:1**

**1.இயல்பான உற்பத்தியினைக் (அலகு)**

| | |
|---|---|
| உட்செலுத்துப் பொருள் | 1,000 |
| கழி: இயல்பான நட்டம் (1000த்தில் 10%) | 100 |
| இயல்பான உற்பத்தி | 900 |

2.இயல்பான உற்பத்தியின் மொத்த அடக்க விலைறைக் கெடுபிடி

| | ரூ |
|---|---|
| மொத்த அடக்கவிலை | 12,000 |
| கழி: இயல்பான நட்டம் மதிப்பு(100x3) | |
| இயல்பான உற்பத்தி மொத்த அடக்க விலை | 11,700 |

இதில்

வழிமுறைகளில் முழுமையின் பல்வேறு நிலைகளில் பொருட்கள் உழைப்பு மற்றும் செயலமைப்புச் செலவு ஆகியவை முன்னேற்ற வேலையில் காணப்படலாம். அடுத்த உற்பத்தி முறைக்கு மாற்றப்பட்ட உற்பத்தியின் மதிப்பீடும் மற்றும் முன்னேற்றித்திலுள்ள உற்பத்திக்கு அல்லது சிறந்த உற்பத்திக்கான கணக்கீடுக.

குறிப்பு

மொத்த அடக்கவிலை

| | |
|---|---|
| உட்செலுத்துப் பொருள் | 50,000 |
| வழிமுறை பொரட்கள்அடககவிலை | 2,000 |
| உழைப்பு அடக்கவிலை | 3,000 |
| செலவுகள் | 2,000 |
| மொத்த அடகக்விலை | 12,000 |

**3.ஒரு அலகுக்கான இயல்பான இடக்கவிலையைக் கண்டுபிடி**

ஒரு அலகுக்கான இயல்பான அடக்கவிலை $= \frac{11,700}{900}$ = ரூ.13

4. இயல்பற்ற லாபத்தைக் காண்க. (அலகுகள்)

| | |
|---|---|
| உண்மையான உற்பத்தி | 920 |
| இயல்பான உற்பத்தி | 900 |
| இயல்பற்ற லாபம் | 20 |

5. அலகுக்கான இயல்பான அடக்கவிலையில், உண்மையான உற்பத்தி இயல்பற்ற லாபம் ஆகியவற்றை மதிப்பிடுக.

| 6. அலகுகள் | ரூ. | ரூ. |
|---|---|---|
| உண்மையான உற்பத்தி | *920 x 13* | *= 11,960* |
| இயல்பற்ற லாபம் | *20 x 13* | *= 260* |

**வழிமுறை:2**

1. இயல்பான உற்பத்தியினைக் (அலகு) கண்டுபிடி.

| | | |
|---|---|---|
| உட்செலுத்துப் பொருள் *(Input)* | *920* | |
| கழி: இயல்பான நட்டம் உட்செலுத்துப் பொருளின் *5%* | | 46 |
| இயல்பான உற்பத்தி | 874 | |

2.இயல்பான உற்பத்தியின் மொத்த அடக்கவிலையினைக் காண்க.

| | ரூ. |
|---|---|
| மொத்த அடக்கவிலை | *21,206* |
| கழி: இயல்பான நட்டம் பெறுமான மதிப்பு *(46 x 5)* | 230 |
| இயல்பான உற்பத்தி மொத்த அடக்கவிலை | *20,976* |

| மொத்த அடக்கவிலை | ரூ. |
|---|---|
| உட்செலுத்துப் பொருளின் அடக்கவிலை | *11,980* |
| வழிமுறைப் பொருட்கள் அடக்கவிலை | *3,020* |
| உழைப்பு அடக்கவிலை | *4,000* |
| செலவுகள் | *2,226* |
| மொத்த அடக்கவிலை | *21,206* |

3.அலகுக்கான இயல்பான அடக்க விலையைக் கண்டுபிடி

குறிப்பு

$$\text{அலகுக்கான இயல்பான அடக்கவிலை} = \frac{\text{மொத்த இயல்பானஅடக்கவிலை}}{\text{இயல்பான உற்பத்தி}} = \frac{20,976}{874} = \text{ரூ}.24$$

4. இயல்பற்ற நட்டத்தை (அலகுள்) கணக்கிடு

| | |
|---|---|
| இயல்பான உற்பத்தி | 874 |
| உண்மையான உற்பத்தி | 870 |
| இயல்பற்ற நட்டம் | 4 |

5. அலகுக்கான இயல்பான அடக்கவிலையில் உண்மையான உற்பத்தி, இயல்பற்ற நட்டம் ஆகியவற்றைக் கண்டுபிடி

| | அலகுகள் | ரூ. | | ரூ. |
|---|---|---|---|---|
| உண்மையான உற்பத்தி | 870 x | 24 | = | 20,880 |
| இயல்பற்ற நட்டம் | 4 x | 24 | = | 96 |

**வழிமுறை:3**

1.இயல்பான உற்பத்தயை (அலகுகள்) கண்டுபிடி.

| | |
|---|---|
| உட்செலுத்துப் பொருள் *(Input)* | 870 |
| கழி: இயல்பான நட்டம் உட்செலுத்துப் பொருளின் *10%* | 87 |
| இயல்பான உற்பத்தி | 783 |

2.இயல்பான உற்பத்தியின் மொத்த அடக்கவிலையினைக் காண்க.

| | ரூ. |
|---|---|
| மொத்த அடக்கவிலை | 31,842 |
| கழி: இயல்பான நட்டம் பெறுமான மதிப்பு *(87 x 6)* | 522 |
| இயல்பான உற்பத்தி மொத்த அடக்கவிலை | 31,320 |

இதில்

| மொத்த அடக்கவிலை | ரூ. |
|---|---|
| உட்செலுத்துப் பொருளின் அடக்கவிலை | 20,880 |
| வழிமுறைப் பொருட்கள் அடக்கவிலை | 3,462 |
| உழைப்பு அடக்கவிலை | 5,000 |
| செலவுகள் | 2,500 |
| மொத்த அடக்கவிலை | 31,842 |

3.அலகுக்கான இயல்பான அடக்க விலையைக் கண்டுபிடி

$$\text{அலகுக்கான இயல்பான அடக்கவிலை} = \frac{\text{மொத்த இயல்பான அடக்கவிலை}}{\text{இயல்பான உற்பத்தி}}$$

$$= \frac{31,320}{783} = ரூ.40$$

குறிப்பு

4. இயல்பற்ற லாபத்தைக் (அலகுகள்) காண்க

| | |
|---|---|
| உண்மையான உற்பத்தி | 800 |
| இயல்பான உற்பத்தி | 783 |
| இயல்பற்ற நட்டம் | |

5. அலகுக்கான இயல்பான அடக்கவிலையில் உண்மையான உற்பத்தி; இயல்பற்ற நட்டம் ஆகியவற்றைக் கண்டுபிடி

| | அலகுகள் | ரூ. | ரூ. |
|---|---|---|---|
| உண்மையான உற்பத்தி | *800 x* | *40 =* | *20,880* |
| இயல்பற்ற நட்டம் | *17 x* | *40 =* | *680* |

**இயல்பற்ற லாபக் கணக்கு**

வழிமுறை 1 மற்றும் 3-ல் ஏற்பட்ட இயல்பற்ற லாப அலகுக்கான இயல்பான அடக்கவிலையில் இக்கணக்கில் வரவு வைக்கப்படுகிறது.

வழிமுறை 1-ல் இயல்பான நட்ட பெறுமான மதிப்பாக ரூ.300 வரவு வைக்கப்பட்டுள்ளது. ஆனால் உண்மையான நட்ட பெறுமான மதிப்பு 80அலகுகளுக்கு (உட்செலுத்துப் பொருள் உண்மையான உற்பத்தி) ரூ.240 மட்டுமே. வித்தியாசம் ரூ.60 இயல்பற்ற லாபக் கணக்கில் பற்று வைக்கப்படுகிறது.

வழிமுறை3-ல் இயல்பான நட்ட பெறுமான மதிப்பாக ரூ.522 வரவு வைக்கப்பட்டுள்ளது. ஆனால் உண்மையான நட்டம் 70 அலகுகள் மற்றும் அந்த உண்மையான துகல்களின் பெறுமான மதிப்பு 70 அலகுகளுக்கு ரூ.420 மட்டுமே. ஆகவே. வித்தியாசம் ரூ.102 இயல்பற்ற லாபக் கணக்கில் பற்று வைக்கப்டுிகறது.

**இயல்பற்ற நட்டக் கணக்கு**

வழிமுறையின் இயல்பான அடக்க விலையில் மதிப்பிடப்பட்ட இயல்பற்ற நட்டத்துடன் இக்கணக்கு பற்றுவைக்கப்பட்டு துகள்களின் உண்மையான பெறுமானத்துடன் வரவு வைக்கப்படுகிறது. வழிமுறை 2-ல் இயல்பற்ற நட்டம் 4 அலகுகள் ஆகும்.

இயல்பான அடக்க விலையில் 4 அலகுகள் மதிப்பிடப்பட்டு இயல்பற்ற நட்டக் கணக்கில் ரூ.96 பற்று வைக்கப்பட்டு உண்மையான பெற்றுக்கொண்ட மதிப்பான ரூ.20 வரவு வைக்கப்படுகிறது.

இயல்பற்ற நட்டக் கணக்கு மற்றும் இயல்பற்ற லாபக் கணக்கு ஆகியவற்றின் மீது இருப்புகள் *(Balance)* அடக்கவிலை லாப நட்டக் கணக்குகளுக்கு மாற்றப்படுகின்றன.

குறிப்பு

## 5.9 பொருட்கள், உழைப்பு மற்றும் செயலமைப்புச் செலவு ஆகியவை முழுமையின் பல்வேறு நிலைகளில் உள்ள முன்னேற்ற வேலைகளடங்கிய உற்பத்தி முறை அடக்க விலைக்கணிப்பு

வழிமுறைகளில் முழுமையின் பல்வேறு நிலைகளில் பொருட்கள் உழைப்பு மற்றும் செயலமைப்புச் செலவு ஆகியவை முன்னேற்ற வேலையில் காணப்படலாம். அடுத்த உற்பத்தி முறைக்கு மாற்றப்பட்ட உற்பத்தியின் மதிப்பீடும் மற்றும் முன்னேற்றித்திலுள்ள வேலைகளின் மதிப்பீடும் பொருட்கள், உழைப்பு மற்றும் செலமைப்புச் செலவு ஆகியவை முன்னேற்றத்திலுள்ள வேலைகளின் முழுமையின் சதவீதத்தை கண்க்கிடுவதன் மூலம் சமமான உற்பத்திக்கு அல்லது சிறந்த உற்பத்திக்கான கணக்கீடுகளுக்கான அவசியத்தை ஏற்படுத்துகின்றன.

**கணக்கினைச் செய்வதற்கான படிகள்**

*[படிகளைப் (steps) புரிந்து கொள்வதற்கான, கீழே தரப்பட்டுள்ள விளக்கத்தைப் படிக்குமாறு மாணவர்கள் கோரப்படுகிறார்கள்]*

**1.சமமான உற்பத்திக்கான பட்டியல் தயார் செய்க:**

அ) ஆரம்ப முன்னேற்றத்திலுள்ள வேலைகளை சமமான, முழுமையான அலகுகளாக மாற்ற முந்தைய காலத்தின் முடிக்கப்படாத முன்னேற்றத்திலுள்ள வேலைகளை முழுமையாக்க பொருட்கள், உழைப்பு மற்றும் செயலமைப்புச் செலவு ஆகியவற்றின் தேவையின் சதவீதத்தைப் பயன்படுத்துவதன் மூலம் இது செய்யப்படுகிறது. (உம்) ஆரம்ப முன்னேற்றித்திலுள்ள வேலைகள் 600 அலகுகள் எனில் பொருட்கள் *80%* முழுமை பெற்றவை. செயலமைப்புச் செலவு மற்றும் உழைப்பு *60%* முழுமை பெற்றவை எனக்கொண்டால், 600 அலகுகள் முழுமையடையத் தேவைப்படும் பொருட்கள் *20%* அதாவது 120 சமமான அலகு முழுமையடையத் தேவைப்படும். பொருட்கள் *20%* அதாவது 120 சமமான அலகு முழுமைக்குத் தேவைப்படும். உழைப்பு மற்றும் செயலமைப்புச் செலவு 600 அலகுகளின் *40%*. அதாவது 240 சமமான அலகுகள்.

ஆ) சம்பந்தப்பட்ட பொருட்கள். உழைப்பு மற்றும் செயலமைப்பு செலவுகளுக்கு உற்பத்திக் காலத்தில் ஆரம்பிக்கப்பட்ட மற்றும் முடிக்கப்பட்ட அலகுகளின் எண்ணிக்கையானது சமமான அலகுகளாகக் கூட்டப்பட வேண்டும்.

(உம்) 2வது முறையிலிருந்து 8,800 அலகுகள் 3வது வழிமுறைக்கு மாறுபடுகின்றன. இது உற்பத்திக்காலதின் ஆரம்ப முன்னேற்றத்திலுள்ள வேலைகள் (600 அலகுகள்) முடிக்கப்பட்டதையும் மீதி 8,200 அலகுகள் இம்முறையில் இக்காலத்தில் ஆரம்பிக்கப்பட்டு முடிக்கப்பட்டதையும் காட்டுகிறது.

இ) கொடுக்கப்பட்ட தகவல்களிலிருந்து இயல்பற்ற நட்ட சமமான அலகுகள் கண்டுபிடிக்கப்பட வேண்டும்.

குறிப்பு

(உ-ம்) கீழ்க்கண்ட எடுத்துக்காட்டில் துகளான அலகுகள் பொருட்களைப் பொறுத்தமட்டில் *100%*ம். உழைப்பு மற்றும் செயலமைப்புச் செலவுகளைப் பொறுத்தமட்டில் *70%* முழுமை பெற்றிருப்பதாகக் கூறப்படுகிறது. 200 அலகுகள் இயல்பற்ற நட்டத்தைப் பிரதிபலிக்கின்றன. சமமான அலகுகளாவன (*equivalent units*).

| | | |
|---|---|---|
| பொருட்கள் | - | 200 அலகுகள் |
| உழைப்பு | - | 140 அலகுகள் *(200 x 70%)* |
| செயலமைப்புச் செலவு | - | 140 அலகுகள் *(200 x 70%)*. |

ஈ) முன்னேற்றத்திலுள்ள வேலைகளின் இறுதி இருப்பின் சமமான முடிக்கப்பட்ட அலகுகள் கண்டுபிடிக்கப்பட வேண்டும்.

(உ-ம்). கீழே உள்ள எடுத்துக்காட்டில் இறுதி முன்னேற்றத்திலுள்ள வேலையானது 1,600 அலகுகள் ஆகும். (பொருட்கள் *70%* முழுமை பெற்றவை) உழைப்பு மற்றும் செயலமைப்புச் செலவு *60%* முழுமை பெற்றவை சமமான அலகுகளாவன.

| | | |
|---|---|---|
| பொருட்கள் | - | 1,120 அலகுகள் (1600 *x 70%*) |
| உழைப்பு | - | 960 அலகுகள் *(1600 x 60%)* |
| செயலமைப்புச் செலவு | - | 960 அலகுகள் *(1600 x 60%)* |

குறிப்பு:

*(i)* உட்செலுத்துப் பொருட்கள் மற்றும் முந்தைய வழிமுறையிலிருந்து மாற்றப்பட்ட பொருட்களைப் பொறுத்தமட்டில் இயல்பற்ற நட்டம், இக்காலத்தில் ஆரம்பிக்கப்பட்டு முடிக்கப்பட்ட அலகுகள், இறுதியில் முன்னேற்றத்தில் உள்ள வேலைகள் ஆகியவையின் சமமான அலகுகள் *100%* முழுமையடைந்திருப்பதாக எடுத்துக் கொள்ளப்பட வேண்டும்.

*(ii)* இயல்பான நட்ட அலகுகள் சம்பந்தப்பட்ட வரையில் பொருட்கள். உழைப்பு மற்றும் செயலமைப்புச் செலவுகளின் சமமான அலகுகள் இல்லை *(Nil)* என எடுத்துக் கொள்ளப்பட வேண்டும்.

## 2. அடக்கவிலைப் பட்டியல் (Statement of Cost)

உட்செலுத்து மற்றும் வழிமுறை பொருட்களின் மொத்த அடக்கவிலை உழைப்பு மற்றும் செயலமைப்புச் செலவு உற்பத்தி செய்யப்பட்ட சமமான அலகுகள் (பொருட்கள். உழைப்பு மற்றும் செயலமைப்புச் செலவு) ஆகியவற்றைக் காட்டும் வகையில் இப்பட்டியல் தயாரிக்கப்படுகிறது. உட்செலுத்துப் பொருள், வழிமுறைப் பொருள், உழைப்பு மற்றும் செயலமைப்புச் செலவு ஆகியவற்றின் ஒரு அலகுக்கான அடக்கவிலையை உற்பத்தி செய்யப்பட்ட சமமான அலகுகளின் எண்ணிக்கையால் வகுப்பதால் கண்டுபிடிக்கப்படுகின்றன.

குறிப்பு

1. **மதிப்பீட்டுப் பட்டியல் (Statement of Evaluation)**

   இப்பட்டியலானது ஆரம்ப முன்னேற்றத்தில் உள்ள வேலை இயல்பற்ற நட்டம், ஆரம்பிக்கப்பட்டு உற்பத்தி செய்யப்பட்ட அலகுகள் மற்றும் இறுதி முன்னேற்றத்தில் உள்ள வேலை ஆகியவைகளின் மதிப்பிடலைக் காண்பிக்கிறது.

2. **வழிமுறைக் கணக்கு (Process Account)**

   இப்பொழுது மேற்கூறியவாறு நிர்ணயிக்கப்பட்ட மதிப்புகள் வழிமுறைக் கணக்கு தயார் செய்வதில் உபயோகப்படுத்தப்படுகின்றன.

**எடுத்துக்காட்டு:12**

வழிமுறையில் செலுத்திய அலகுகள் *2,500*

முடிக்கப்பட்ட அலகுகள் *2,000*

முன்னேற்றத்திலுள்ள அலகுகள் 500

வழிமுறைச் செலவுகள்

மூலப்பொருட்கள் ரு.*22,500*: கூலி ரு.*6,750*: மற்றும் செயலமைப்புச் செலவுகள் ரு.*2,250.*

முன்னேற்றித்திலுள்ள அலகுகளின் பேரில் *50%* மூலப்பொருட்கள் கூலி மற்றும் செயலமைப்புச் செலவுகள் ஏற்பட்டுள்ளன.

(அ) சமமான உற்பத்திக்கான பட்டியல்

(ஆ) ஒரு அலகுக்கான அடக்கவிலைப் பட்டியல் மற்றும்

(இ) வழிமுறைக் கணக்கு ஆகியவற்றைத் தயார் செய்க.

தீர்வு:

**சமமான உற்பத்திக்கான பட்டியல்**

| உட்செலுத்தியவை | அலகுகள் | உற்பத்தி பொருள் | அலகுகள் | சமமான உற்பத்தி பொருள்: மூலப்பொருட்கள் அளவு | % முடிந்தது | கூலி அளவு | % முடிந்தது | செயலமைப்புச் செலவுகள் அளவு | % முடிந்தது |
|---|---|---|---|---|---|---|---|---|---|
| அலகுகள் உட்செலுத்தியது | *2500* | அலகுகள் முடிக்கப்பட்டவை | *2000* | *2000* | *100* | *2000* | *100* | *2000* | *100* |
| | | இறுதியில் முன்னேற்றத்திலுள்ள அலகுகள் | *500* | *250* | *50* | *250* | *50* | *250* | *50* |
| | *2500* | | *2500* | *2250* | | *2250* | | *2250* | |

குறிப்பு

## ஒரு அலகுக்கான அடக்கவிலைப் பட்டியல்

| அடக்கவிலைக் கூறுகள் | அடக்கவிலை | உற்பத்தி செய்த சமமான அலகுகள் | ஒரு அலகுக் கான அடக்க விலை |
|---|---|---|---|
| மூலபொருட்கள் | *22,500* | *2,250* | *10* |
| கூலி | *6,750* | *2,250* | *3* |
| சேயலமைப்புச் செலவுகள் | *2,250* | *2,250* | *1* |

## மதிப்பீட்டு பட்டியல்

| விவரம் | அடக்கவிலை மூலகூறுகள் | சுமமான அலகுக ள் | ஒரு அலகு க்கான அடக்க விலை ரூ. | அடக் கவிலை ல | மொத் தம் |
|---|---|---|---|---|---|
| உட்செலுத்திய அலகுகளும் முடிக்கப்பட்டவை களும் | மூலப் பொருட்கள் | *2,000* | *10* | *20,00 0* | |
| | கூலி | *2,000* | *3* | *6,000* | |
| | செயலமைப்பு ச் செலவுகள் | *2,000* | *1* | *2,000* | *28,000* |
| முன்னேற்றித்திலு ள்ள இறுதிச் சரக்கு இருப்பு | மூலப்பொருட் கள் | *250* | *10* | *2,500* | |
| | கூலி | *250* | *3* | *750* | |
| | செயலமைப்பு ச் செலவுசகள | *250* | *1* | *250* | *3,500* |
| | | | | | *31,500* |

## வழிமுறை கணக்கு

| விவரம் | அலகுகள் ரூ | தொகை ரூ | விவரம் ரூ | அலகு கள் ரூ | தொகை க ரூ |
|---|---|---|---|---|---|
| மூலப்பொருட்க ள் | *2,500* | *22,500* | முடிக்கப்பட்ட சரக்கு இருப்புக் க/கு | *2,000* | *28,000* |
| கூலி | | *6,750* | முன்னேற்றத்திலுள்ள வேலையின் அலகுகள் | *500* | *3,500* |
| செயலமைப்புச் செலவுகள் | | *2,250* | | | |
| | *2,500* | *31,500* | | *2,500* | *31,500* |

குறிப்பு

### சமமான உற்பத்திப் பட்டியல்

| உட்செலுத்தியளவு | அலகுகள் | உற்பத்தி பொருள் | அலகுகள் | சமமான உற்பத்தி பொருள் | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|
| | | | | மூலப்பொருட்கள் | | கூலி | | செயலமைப்புச் செலவுகள் | |
| | | | | அளவு | % முடிந்தது | அளவு | % முடிந்தது | அளவு | %முடிந்தது |
| உட்செலுத்தியது அலகுகள் | *20000* | வழிமுறையில் முடிக்கப் பட்டவை | *19000* | *19000* | *100* | *19000* | *100* | *19000* | *100* |
| | | இறுதியில் முன்னேற்றத்திலுள்ள அலகுகள் | *1000* | *1000* | *100* | *400* | *40* | *400* | *40* |
| | *20000* | | *20000* | *20000* | | *19400* | | *19400* | |

**எடுத்துக்காட்டு:13**

பொருள் *'X'* சம்பந்தமான விவரங்கள் கீழே கொடுக்கப்பட்டுள்ளன.

ஆரபம்பத்தில் முன்னேற்றித்திலுள்ள வேலை இல்லை.

முாத ஆரம்பத்தில் உட்செலுத்திய அலகுகளில் முடிக்கப்பெற்றவை-19.000

அடக்கவிலை விவரம்

| | |
|---|---|
| மூலப்பொருட்கள் | ரு.*60,000* |
| கூலி | ரு.*58,200* |
| செயலமைப்புச் செவுகள் | ரு.*19,400* |

மாத இறுதியில் முன்னேற்றத்திலுள்ள வேலையின் விவரம் முன்னேற்றத்திலுள்ள *1,000* அலகுகளின் வேலை முடிக்கப்பட்ட அளவின் விவரம் வருமாறு.

கூலி *40%* செயலமைப்புச் செலவுகள் *40%* மூலப்பொருட்கள் *100%* தேவையான பட்டியல்களையும், வழிமுறைக் கணக்கையும் தயார் செய்க.

தீர்வு

### சமமான உற்பத்திக்கான பட்டியல்

| அடக்கவிலைக் கூறுகள் | அடக்கவிலை | உற்பத்தி செய்த சமமான அலகுகள் | ஒரு அலகுக்கான அடக்கவிலை |
|---|---|---|---|
| மூலபொருட்கள் | *60,000* | *20,000* | *3* |
| கூலி | *58,200* | *19,400* | *3* |
| சேயலமைப்புச் செலவுகள் | *19,400* | *19,400* | *1* |

குறிப்பு

### ஒரு அலகுக்கான அடக்கவிலைப் பட்டியல்

| விவரம் | அடக்கவிலை மூலகூறுகள் | சமமான அலகுகள் | ஒரு அலகுக்கான அடக்கவிலை ரூ. | அடக்க விலை | மொத்தம் |
|---|---|---|---|---|---|
| முடிக்கப்பட்ட பொருட்கள் | மூலப் பொருட்கள் | *5,000* | *12.50* | *37,500* | |
| | கூலி | *3,000* | *15.00* | *45,000* | |
| | செயலமைப்புச் செலவுகள் | *3,000* | *15.00* | *45,000* | *1,27,500* |
| முன்னேற்றித்தி லுள்ள இறுதிச் சரக்கு இருப்பு | மூலப்பொருட்கள் | *1,000* | *12.50* | *12,500* | |
| | கூலி | *200* | *15.50* | *3,000* | |
| | செயலமைப்புச் செலவுசகள | *200* | *15.50* | *3,000* | *18,500* |
| | | | | | *1,46,000* |

### மதிப்பீட்டுப் பட்டியல்

| விவரம் | அலகுகள் ரூ | தொகை ரூ | விவரம் ரூ | அலகுகள் ரூ | தொகை ரூ |
|---|---|---|---|---|---|
| மூலப்பொருட்கள் | *5,000* | *50,000* | வழக்கமான நட்டம் | *1,000* | |
| கூலி | | *48,000* | முடிக்கப்பட்ட பொருட்கள் | *3,000* | *1,27,500* |
| செயலமைப்புச் செலவுகள் | | *48,000* | முன்னேற்றத்திலுள்ள பொருட்கள் | *1,000* | *18,5000* |
| | *2,500* | *31,500* | | *2,500* | *31,500* |

**எடுத்துக்காட்டு:14**

ஒரு மாத துவக்கத்தில் *4,000* அலகுகள் வழிமுறை *A*-யில் செலுத்தப்பட்டன. இயல்பான நட்டம் உட்செலுத்திய அலகுகளில் *5%* என எதிர்பார்க்கப்படுகிறது. மாத இறுதியில் *2,800* அலகுகள் முழுமையாக முடிக்கப்பட்டு வழிமுறை *B*-யில் செலுத்திப்படுகிறது. 920 அலகுகள் முன்னேற்றத்திலும் 280 அலகுகள் சேதமடைந்தும் இருக்கின்றன. முன்னேற்றத்திலுள்ள அலகுகளின் பேரில் *75%* மூலபொருட்களும், *50%* கூலியும் மற்றும் *50%* செயலமைப்புச் செலவுகள் எற்பட்டியிருக்கின்றன.

| நேரடி மூலப்பொருளின் நுகர்வு | **2,24,000** |

**எடுத்துக்காட்டு : 6**

கீழக்காணும் விவரங்களைக் கொண்டு நேரடி மூலப்பொருள் நுகர்வை 2006, ஜனவரி 31ம் தேதி முடிய கண்டுபிடிக்கவும்.

| விவரம் | ரூ. |
|---|---|
| நேரடி மூலப்பொருளின் சரக்கு இருப்பு (01.01.2006) | 30,000 |
| நேரடி மூலப்பொருள் கொள்முதல் | 3,00,000 |
| நேரடி மூலப்பொருள் சரக்கிருப்பு (31.01.2006) | 16,000 |
| கழிவு பொருளை விற்றது | 4,000 |

**தீர்வு**

**நேரடி மூலப்பொருளின் நுகர்வை கண்டுபிடித்தல்**

| **விபரம்** | **ரூ.** |
|---|---|
| நேரடி மூலப்பொருளின் ஆரம்ப சரக்கிருப்பு | 30,000 |
| கூட்டு: கொள்முதல் (நேரடி மூலப்பொருள்) | 3,00,000 |
| | 3,30,000 |
| கழி: இறுதி நேரடி மூலப்பொருள் சரக்கிருப்பு | 36,000 |
| | 2,94,000 |
| கழி: கழிவு பொருளை விற்றது | 4,000 |
| நேரடி மூலப்பொருளின் நுகர்வு | 2,90,000 |

குறிப்பு

**எடுத்துக்காட்டு : 7**

கீழ்க்காணும் தகவல்களிலிருந்து தொழிற்சாலை அடக்கவிலையை 2006ம் ஆண்டு ஜனவரி முடிய கணக்கிடவும்.

| விவரம் | ரூ. |
|---|---|
| நேரடி மூலப்பொருள் | 60,000 |
| நேரடிக் கூலி | 80,000 |
| நேரடிச் செலவுகள் | 10,000 |
| தொழிற்சாலை மேற்செலவுகள் | 30,000 |
| கழிவு பொருளை விற்றது | 1,000 |

**தீர்வு**

**தொழிற்சாலை அடக்கவிலையை கணக்கிடுதல்**

| விவரம் | ரூ. | ரூ. |
|---|---|---|
| நேரடி மூலப்பொருள் | 60,000 | |
| நேரடிக் கூலி | | 80,000 |
| நேரடிச் செலவுகள் | | 10,000 |
| **பிரதம அடக்கவிலை** | | **1,50,000** |
| தொழிற்சாலை மேற்செலவுகள் | 30,000 | |
| **கழி:** கழிவு பொருளை விற்றது | 1,000 | 29,000 |
| தொழிற்சாலை அடக்கவிலை | | **1,79,000** |

**எடுத்துக்காட்டு : 8**

பின்வரும் விவரங்களைக் கொண்டு பொருளின் அடக்கவிலையை கண்டுபிடிக்கவும்.

| விவரம் | | ரூ. |
|---|---|---|
| நேரடி மூலப்பொருள் | 30,000 | |
| நேரடிக் கூலி | 40,000 | |
| நேரடிச் செலவுகள் | 10,000 | |
| ஆரம்ப வேலை முற்றாப் பொருள் (முதன்னிலையில்) | | 5,000 |
| இறுதி வேலை முற்றாப் பொருள் (முதன்னிலையில்) | | 3,000 |
| தொழிற்சாலை மேற்செலவு | | 15,000 |

**தீர்வு:**

**அடக்கவிலைப் பட்டியல்**

| விவரம் | ரூ. |
|---|---|
| நேரடி மூலப்பொருள் | 30,000 |
| உற்பத்திக் கூலி | 40,000 |
| நேரடிச் செலவுகள் | 10,000 |
| **பிரதம செலவுகள்** | **80,000** |
| கூட்டு: ஆரம்ப வேலை முற்றாப்பொருள் | 5,000 |
| | 85,000 |
| கழி: இறுதி வேலை முற்றாப் பொருள் | 3,000 |
| | 82,000 |
| கழி: தொழிற்சாலை மேற்செலவு | 15,000 |
| **தொழிற்சாலை அடக்கவிலை** | **67,000** |

குறிப்பு

**எடுத்துக்காட்டு: 9**

அடியிற்கண்ட விவரங்களைக் கொண்டு அடக்கவிலை தொகுப்பைத் தயாரிக்கவும்.

| விவரம் | ரூ. |
|---|---|
| நேரடி மூலப்பொருள் | 1,60,000 |
| நேரடிக் கூலி | 1,20,000 |
| நேரடிச் செலவுகள் | 50,000 |
| தொழிற்சாலை மேற்செலவு | 90,000 |
| ஆரம்ப வேலை முற்றாப் பொருள் (தொழிற்சாலை அடக்கவிலை) | 16,000 |
| இறுதி வேலை முற்றாப் பொருள் (தொழிற்சாலை அடக்கவிலை) | 12,000 |
| தொழிற்சாலை மேற்செலவு | 15,000 |

**தீர்வு:**

**அடக்கவிலைப் பட்டியல்**

| விவரம் | ரூ. |
|---|---|
| நேரடி மூலப்பொருள் | 1,60,000 |
| நேரடிக் கூலி | 1,20,000 |
| நேரடிச் செலவு | 50,000 |
| பிரதம அடக்கவிலை | 3,30,000 |
| தொழிற்சாலை மேற்செலவு | 90,000 |
| | 4,20,000 |
| கூட்டு: ஆரம்ப வேலை முற்றாப் பொருள் | 16,000 |
| | 4,36,000 |
| கழி: இறுதி வேலை முற்றாப் பொருள் | 12,000 |
| **தொழிற்சாலை அடக்கவிலை** | **4,24,000** |

**எடுத்துக்காட்டு : 10**

பின்வரும் விவரங்களை கொண்டு அடக்கவிலைப் பட்டியல் 2006ம் ஆண்டு முடிய தயாரிக்கவும். தொழிற்சாலையின் மேற்செலவு *20%* பிரதம அடக்கவிலையிலும், நிர்வாக மேற்செலவு *80%* தொழிற்சாலையின் மேற்செலவிலும் ஏற்படுத்தவும்.

| விவரம் | ரூ. |
|---|---|
| நேரடி மூலப்பொருள் ஆரம்பச் சரக்கு இருப்பு | 1,44,000 |
| நேரடி மூலப்பொருள் கொள்முதல் | 8,64,000 |
| நேரடி மூலப்பொருள் இறுதி சரக்கு இருப்பு | 2,16,000 |
| நேரடிக் கூலி | 3,60,000 |

**தீர்வு:**

குறிப்பு

**அடக்கவிலைப் பட்டியல்**

| விவரம் | | மொத்த அடக்கவிலை | % அடக்கவிலை |
|---|---|---|---|
| நேரடி மூலப்பொருள் நுகர்வு: | | | |
| நேரடி மூலப்பொருளின் ஆரம்ப சரக்கு இருப்பு | 1,44,000 | | |
| கூட்டு: கொள்முதல் | 8,64,000 | | |
| | 10,08,000 | | |
| கழி: நேரடி மூலப்பொருளின் இறுதி சரக்கு இருப்பு | 2,16,000 | | |
| | | 7,92,000 | 50.55 |
| நேரடிக் கூலி | | 3,60,000 | 22.98 |
| **பிரதம அடக்கவிலை** | | 11,52,000 | 73.53 |
| தொழிற்சாலை மேற்செலவு | | | |
| $\left[\text{பிரதம அடக்கவிலையில் } 20\% \; 11,52,000 \times \frac{20}{100}\right]$ | | 2,30,400 | 14.71 |
| **தொழிற்சாலை அடக்கவிலை** | | 13,82,400 | 88.24 |
| நிர்வாக மேற்செலவு | | | |
| $\left[\text{தொழிற்சாலை மேற் செலவில் } 80\% \; 2,30,400 \times \frac{80}{100}\right]$ | | 1,84,320 | 11.65 |
| **மொத்த அடக்கவிலை** | | 15,33,720 | 100.00 |

**எடுத்துக்காட்டு : 11**

அடியிற்கண்ட செய்திகளில் இருந்து அ) பிரதம அடக்கவிலை ஆ) தொழிற்சாலை மேற்செலவு இ) தொழிற்சாலை அடக்கவிலை ஈ) பொதுசெலவு உ) மொத்த அடக்கவிலையை 2006ம் ஆண்டு மார்ச் 31 முடிய கணக்கிடவும்.

குறிப்பு

| | ரூ. | | ரூ. |
|---|---|---|---|
| நேரடி மூலப்பொருள் | | ரொக்க தள்ளுபடி கொடுத்தது | 3,400 |
| சரக்கு இருப்பு (1.4.96) | 47,000 | வராக்கடன் | 4,100 |
| | | கருவியின் மீது தேய்மானம் | 10,600 |
| சரக்கு இருப்பு (31.3.97) | 50,000 | வாடகை, வரி, காப்பீடு (தொழிற்சாலைக்கு) | 3,000 |
| கொள்முதல் | 2,08,000 | வாடகை, வரி, காப்பீடு (நிர்வாக துறைக்கு) | 1,000 |
| அலுவலகச் சம்பளம் | 9,600 | பயணச் செலவு | 3,100 |
| நிர்வாக சம்பளம் | 14,000 | | |
| உள்தூக்குக் கூலி | 8,200 | இயக்குநர் படி | 6,000 |
| வெளித்தூக்குக் கூலி | 5,100 | எரிபொருள் தண்ணீர் (தொழிற்சாலைக்கு) | 1,500 |
| விற்பனையாளர் சம்பளம் மற்றும் கழிவு | 8,400 | எரிபொருள், தண்ணீர் (நிர்வாகத் துறைக்கு) | 300 |
| உற்பத்திக் கூலி | 1,40,000 | பொதுச் செலவுகள் | 5,000 |
| இயந்திரத்தின் தேய்மானம் | 7,100 | மேலாளர் சம்பளம் | 12,000 |
| மனைத்துணைப் பொருட்களின் மீது தேய்மானம் | 600 | | |

குறிப்பு

**தீர்வு:**

**அடக்கவிலைப் பட்டியல் 2006ம் ஆண்டு மார்ச் 31 முடிய**

| விவரம் | ரூ. | ரூ. |
|---|---|---|
| நேரடி மூலப்பொருள் நுகர்வு | | |
| ஆரம்ப சரக்கு இருப்பு | 47,000 | |
| கூட்டு: கொள்முதல் | 2,08,000 | |
| உள்தூக்குக் கூலி | 8,200 | |
| | 2,63,200 | |
| கழி: இறுதி சரக்கு இருப்பு | 50,000 | |
| | | 2,13,200 |
| உற்பத்திக் கூலி | | 1,40,000 |
| பிரதம அடக்கவிலை | | 3,53,200 |
| தொழிற்சாலை மேற்செலவுகள் | | |
| தொழிற்சாலை சம்பளம் | 9,600 | |
| கருவியின் தேய்மானம் | 10,600 | |
| வாடகை, வரி, காப்பீடு (தொழிற்சாலை) | 3,000 | |
| இயந்திரத்தின் மீது தேய்மானம் | 7,100 | |
| எரிபொருள், தண்ணீர் (தொழிற்சாலை) | 1,500 | |
| மேலாளர் சம்பளம் | 10,000 | 41,800 |
| தொழிற் துறைக்கு $\left[1,200 \times \frac{40}{48}\right]$ | | |
| தொழிற்சாலை அடக்கவிலை | | 3,95,000 |
| நிர்வாகச் சம்பளம் | 14,000 | |
| வெளித்தூக்குக் கூலி | 5,100 | |
| வராக்கடன் | 4,700 | |
| வாடகை, வரி, காப்பீடு (நிர்வாக துறைக்கு) | 1,000 | |
| பயணச் செலவுகள் | 3,100 | |
| விற்பனையாளர் சம்பளமும், கழிவும் | 8,400 | |
| மனைத்துணைப் பொருட்களின் தேய்மானம் | 600 | |
| இயக்குநர் படி | 6,000 | |
| எரிபொருள், தண்ணீர் (நிர்வாகத் துறைக்கு) | 300 | |
| பொதுச் செலவுகள் | 5,000 | |
| மேலாளர் சம்பளம் (நிர்வாக துறைக்கு) $\left[1,200 \times \frac{8}{48}\right]$ | 2,000 | 50,200 |
| மொத்த அடக்கவிலை | | 4,45,200 |

குறிப்பு: ரொக்கத் தள்ளுபடி அடக்கவிலைப் பட்டியலில் வராது. அது நிதிக்கணக்கில்தான் வரும்.

**எடுத்துக்காட்டு:12**

ஒரு தொழிற்சாலையின் அடக்கவிலைக் கணக்குப் பதிவேடுகளிலிருந்து எடுக்கப்பட்ட இருப்புகளிலிருந்து அடக்கவிலைப் பட்டியல் 2006ம் ஆண்டு ஜூலை 31-ம் தேதி முடிய தயாரிக்கவும்.

| விவரம் | ரூ. |
|---|---|
| நேரடி மூலப்பொருள் நுகர்வு ஆரம்பச் சரக்கு இருப்பு | 10,000 |
| கொள்முதல் | 85,000 |
| இறுதிச் சரக்கு இருப்பு | 4,000 |
| உற்பத்திக் கூலி | 20,000 |
| நேரிடைச் செலவுகள் | 10,000 |

தொழிற்சாலை மேற்செலவுகள் *100%* ஆக உற்பத்தி கூலியில் கணக்கிடவும்.

நிர்வாக மேற்செலவு *10%* ஆக தொழிற்சாலை அடக்கவிலையில் கணக்கிடவும்.

குறிப்பு

விற்பனை மற்றும் பகிர்ந்து அளிக்கும் செலவுகள் ரூ.2 வீதம் ஒரு அலகு விற்பனைக்கு கணக்கிடவும்.

முற்றுப் பெற்ற பொருளின் உற்பத்தி அலகுகள் 10,000.

முற்றுப் பெற்ற சரக்கு இருப்பு ஆரம்பத்தில் 1,000 அலகுகள் ரூ.16,000 என்ற மதிப்பில்

முற்றுஙப் பெற்ற சரக்கு இருப்பு இறுதியில் 2,000 அலகுகள்

விற்பனை விலையின் மீது 20%இலாபம் என்ற அடிப்படையில் பொருட்கள் விற்கப்படுகிறது.

வேலை முற்றாப் பொருள் ஆரம்பத்திலும் இறுதியிலும் இல்லை.

**தீர்வு: அடக்கவிலைப் பட்டியல் -2006, ஜுலை 31ம் தேதி முடிய**

உற்பத்தி அலகுகள் 10,000

| விவரம் | | மொத்த செலவு | ஒரு அலகின் அடக்க செலவு |
|---|---|---|---|
| நேரிடை மூலப்பொருள் நுகர்வு | | | |
| ஆரம்பச் சரக்கு இருப்பு | 10,000 | | |
| கூட்டு : கொள்முதல் | 85,000 | | |
| | 95,000 | | |
| கழி : இறுதிச் சரக்கு இருப்பு | 4,000 | | |
| | | 91,000 | 9.10 |
| உற்பத்திக் கூலி | | 20,000 | 2.00 |
| நேரிடைச் செலவுகள் | | 10,000 | 1.00 |
| **பிரதம அடக்கவிலை** | | 1,21,000 | 12.10 |
| தொழிற்சாலை மேற்செலவு (100% உற்பத்தி கூலியில்) | | 20,000 | 2.00 |
| **தொழிற்சாலை அடக்கவிலை** | | 1,21,000 | 14,10 |
| நிர்வாக மேற்செலவு (10% தொழிற்சாலை அடனக்கவிலை ) | | 14,100 | 1,41 |
| **மொத்த அடக்கவிலை** | | 1,55,000 | 15.51 |
| கூட்டு: ஆரம்ப முற்றுப் பெறற சரக்கு இருப்பு 1,000 அலகுகள் | | 16,000 | - |
| குழி : இறுத் முற்றப் பெற்ற சரக்கு இருபபு 1,000 அலகுகள் | | 1,71,100 | - |
| *{1,55,100x 2,000/10,000}* | | *31,0220* | - |
| **மொத்த உற்பத்தி அடக்கவிலை** | | 1,40,080 | |
| விற்பனை மற்றும் பகிர்ந்தளிக்கும் செலவு | | 18,000 | |
| **விற்பனை அடக்கவிலை** | | 1,58,080 | |
| இலாபம் *20%* (விற்பனை விலையில் *20%* = அடக்கவிலையில் *{1,58,000x25/100}* | | 39,520 | |
| **விற்பனை விலை** | | 1,97,600 | |
| விற்பனை அலகுகள் *10,000+ 1,000 – 2,000=9,000* | | | |
| ஒருஅலகின் விறபனை விலை *1,97,600/9,000* | | | *21.96* |

**எடுத்துக்காட்டு : 13**

குறிப்பு

பின்வரும் விவரங்களைக் கொண்டு அடக்கவிலைப் பட்டியல் தயாரிக்கவும் (31மார்ச2006)

| **விபரம்** | **ரூ** |
|---|---|
| நேரடி மூலபொருள் நுகர்வு | 1,60,000 |
| நேரடி கூலி | 96,000 |
| இயந்திரம் இயங்கும் நேரம் | 16,000 |
| இயந்திரம்மணிநேர வீதம் | |

நிர்வாக மேற்செலவு 10% தொழிற்சாலை அடக்கத்தில் விற்பனை செலவு ரூ1.50 வீதம் ஒரு அலகு விற்பனையில் மொத்த உற்பத்தி அலகுகள் 8,000

மொத்த அலகுகள் விற்பனை 7,200 அலகுகள் ரூ50 வீதம்.

**தீர்வு**

| **விபரம்** | **மொத்தச் செலவு ரூ** | **ஒரு அலகின அடக்கச் வெலவு ரூ பை** |
|---|---|---|
| நேரடி மூலப்பொருள் நுகர்வு | 1,60,000 | 20.00 |
| நேரடிக் கூலி | 96,000 | 12.00 |
| **பிரதம அடக்கவிலை** | 2,56.000 | 32.00 |
| தொழிற்சாலை மேற்செலவுகள் (4% வீதம் 8 இயந்திர மணிகளுக்கு | 64,000 | 8.00 |
| **தொழிற்சாலை அடக்கவிலை** | 3,20,000 | 40.00 |
| நிர்வாக மேற்செலவு (10% வீதம் தொழிற்சாலை அடக்கத்தில்) $\{3,20,000x \frac{10}{100}\}$ | 32,000 | 4.00 |
| | | 4.00 |
| கழி : இறுதி சரக்கு முற்றுப்பெற்ற பொருள் 8,*000-7200(800x44)* | 3,52,000<br>35.200 | 44.00 |
| மொத்த அட்க்கவிலை | 3,16,800 | |
| விற்பனை மற்றும் பகிர்ந்தளிக்கும் செலவு ரூ1.50 ஒரு அலகு வீதம் *(7,0200x1.50)* | 10,800 | 1.50 |
| விற்பனை | 3,27,600 | 45.50 |
| அடக்கவலை இலாபம் | 32,400 | 4.50 |
| விற்பனை விலை *(7,200x50)* | 3,60,000 | 50,00 |

குறிப்பு

**எடுத்துக்காட்டு :14**

அடியிற்கண்ட செய்திகளிலிருந்து பொருளில் அடக்க தொகுப்பை 2006–ம் ஆண்டு மார்ச்31-ம் தேதி முடிய தயாரிக்கவும்

| விவரம் | ரூ |
|---|---|
| சரக்கு இருப்பு மார்ச் 1,2006 | 25,000 |
| நேரடி மூலப்பொருள் | 17,360 |
| முற்றுப்பெற்ற பொருள் | 3,601 |
| சரக்கு இருப்பு மார்ச் 31,2006 | |
| நேரடி முலப்பொருள் | 26,250 |
| முற்றுப்பெற்ற பொருள் | 15,750 |
| கொள்முதல் -மூலப்பொருள் | 21,900 |
| வேலை முற்றாப்பொருள் மார்ச்1.2006 | 8,220 |
| வேலைமுற்றாப்பொருள் மார்ச் 31.3.2006 | 9,100 |
| முற்றுப்பெற்ற பொருள்விற்பனை | 72,310 |
| நேரடி கூலி | 17,150 |
| உற்பத்திஅல்லாத கூலி | 830 |
| தொற்சாலை மேற்செலவுகள் | 8,340 |
| நிர்வாக மேற்செலவுகள் | 3,160 |
| விற்பனை மற்றும் பகிர்ந்து அளிக்கும் செலவுகள் | 4,210 |

**அடக்கவிலையிலைப் பட்டியல்**

**2006மார்ச் 31-ம் தேதி முடிய**

| விபரம் | ரூ | ரூ |
|---|---|---|
| ஆரம்ப நேரிடை மூலப்பொருள் இருப்பு | 25,000 | |
| கூட்டு : கொள்முதல் | 21,900 | |
| கழி: இறுதிநேரிடை மூலப்பொருள் இருப்பு | 46,900 | |
| நேரடி மூலப்பொருள்கள் நுகர்வு | 26,250 | |
| நேரடிக் கூலி | | 20,650 |
| **பிரதம அடக்கவிலை** | | 17.150 |
| உற்பத்தி அல்லாத கூலி | 830 | |
| தொழிற்சாலை மேற்செலவு | 8,340 | |
| கூட்டு: வேலை முற்றாப் பொருள்1.3.2006 | | 46.970 |
| | | 8,220 |
| கழி: வேலை முற்றப் பொருள் 31..3.2006 | | 55,190 |
| **தொழிற்சாலை அடக்கவிலை** | | 9,100 |
| நிர்வாக மேற்செலவு | | 46,090 |
| மொத்த உற்பத்திச் செலவு | | 3,160 |
| கூட்ட : முற்றுபெற்ற சரக்கு (1.3.2006 | | 66,610 |
| கழி: முற்றுப்பெற்ற சரக்கு (31.3.2006) | | 15,750 |
| மொத்த அடக்கவிலை | | 50,860 |
| இலாபம் | | 21,450 |
| விற்பனை | | 72,310 |

குறிப்பு

**எடுத்துக்காட்டு :15**

பின்வரும் விவரகளைக் கொண்டு அடக்கவிலைப் பட்டியலைத் தயார் செய்யவும் (30.06.2006)

| விவரம் | ரூ |
|---|---|
| நேரடி மூலப்பொருள் கொள்முதல் | 1,32,000 |
| நேரடி கூலி | 1,10,000 |
| வாடகை, காப்பீடு மற்றும் தொழிற்சாலை மேற்செலவுகள் | 44,000 |
| உள்தூக்குக் கூலி | 1,584 |
| சரக்கு 1.1.2006–ல் | |
| நேரடி மூலப்பொருள் | 22,000 |
| முற்றுப்பெற்ற பொருள் | 17,600 |
| சரக்கு30.06.2006-ல் | |
| நேரடி மூலப்பொருள் | 24,464 |
| முற்றுப்பெறபெற்ற பெருள் | 35,200 |
| வேலை முற்றாப் பொருள் 1.1.2006 | 5,280 |
| வேலை முற்றாப் மேற்பார்வை 30.6.2006-ல் | 17,600 |
| தொழிற்சாலை மேற்பார்வை | 8,800 |
| முற்றுபெற்றபொருள் விற்பனை | 3,30,000 |

விளம்பரம் தள்ளுபடி விற்பனை செலவு ஒரு டன்னுக்கு 75 பைசா வீதம் கணக்கிடவும் உற்பத்தி செய்யப்பட்ட பொருள் 25,600 டன்கள்

**திர்வு**

அடக்கவிலைப் பட்டியல்

2006 –ம் ஆண்டு ஜீன் 30 முடிய உற்பத்தி

| விபரம் | ரூ | ரூ |
|---|---|---|
| நேரடி மூலப்பொருள் நுகர்வு: | | |
| ஆரபம் நேரடி மூலப்பொருள் சரக்கு இருப்பு | 22,000 | |
| கூட்டு: கொள்முதல; | 1,32,000 | |
| உள்தூக்கு கூலி | 1,584 | |
| கழி: இறும்' நேரடி மூலப்பொருள் சரக்கு இருப்பு | 1,55,584 | |
| | 24,464 | |
| நேரடிக்கூலி | | 1,31,120 |
| | | 1,10,000 |
| பிரதம அடக்கவிலை | | 2,41,120 |
| தொழிற்சாலை மேற்செலவு | | |
| வாடகை காப்பீடு மற்றும் செலவுகள் | 44,000 | |
| தொழிற்சாலை மேற்பார்வை | 8,800 | |
| | | 52,800 |
| | | 2,93,920 |
| கூட்டு: வேலை முற்றாப் பொருள்1.1.2006 | | 5,280 |
| கழி: வேலை முற்றாப்பொருள் 30.06.2000ல் | | 17.600 |

குறிப்பு

| விபரம் | ரூ | ரூ |
|---|---|---|
| தொழிற்சாலை அடக்கவிலை அல்லதுமொத்த உற்பத்தி செலவு | | 2,81,600 |
| கூட்டு: முற்றுப் பெற்றபொருள்1.1.2006(1,600-டன்) | | 17,600 |
| | | 2.99,200 |
| கழி: முற்றப் பெற்ற பொருள் 30.06.2006(3,200டன்) | | 35,200 |
| மொத்த அடக்கவிலை | | 2,64,000 |
| விளம்பரம் தள்ளுபடி விற்பனை செலவுகள் 75 பைசாவிதம*(75x24,24,000)* | | |
| *(25,500+ 1,600-3,200=24,000)* | | 1,800 |
| **விற்பனை அடக்கவிலை** | | 2,82,000 |
| இலாபம் | | 48.000 |
| விற்பனை | | 3,30,000 |

**I. கோடிட்ட இடத்தை நிரப்புக**

அ. நேரடி மூலப்பொருள் உழைப்பு மற்றும் செலவுகளின் மொத்தமே________ அடக்கவிலையாகும்.

ஆ. தொழிற்சாலையில் உற்பத்திக்கு ஏற்படும் மறைமுக செலவுகளில் ____________ மேற்செலவு என்கிறோம்.

இ. இயக்குனர் கட்டணம____________ மேற்செலவு ஆகும்.

ஈ. உற்பத்தி அடக்விலை கணப்பில் அடக்கவிலையை வசதியான பொருள் காண்கின்றோம்.

உ. பொருளின் மொத்த அடக்கவிலையைப் பிரிந்து பார்ப்பதற்கு விலைப் ____________ என்று பெயர்.

## 6.7 அருஞ்சொற்கள்

**அடக்கவிலைப் பட்டியல்** : ஒரு பொருளுக்கான அடக்க விலையை பல்வேறு பிரிவுகளாக பிரித்துக் காட்டும் பட்டியல்.

**பிரதம அடக்கவிலை** : நேரம் பொருள், நேரடி உழைப்பு மற்றும் நேரடிச் செலவுகள் ஆகியவற்றின் கூட்டல்.

## 6.8 தொகுப்புரை

உற்பத்தி அடக்க விலை முறையானது ஒரு வகையான பொருளை தயாரிக்கும் பொழுது பயன்படுத்துகின்றோம். இம்முறையில் மொத்த அடக்க விலையை பிரித்துக் காண்பதற்கு அடக்கவிலைப் பட்டியலைத் தயாரிக்கின்றோம். இதன் வாயிலாக ஒரு அலகின் அடக்கவிலை மற்றும் மொத்த பொருள்களின் அடக்க விலையையும் காணமுடியும்.

## 6.9 உங்கள் முன்னேற்றத்தை சரிபார்க்கும் விடைகள்

அ. பிரதம ஆ. தொழிற்சாலை இ. அலுவலக ஈ. ஆலகிற்கு உ. பட்டியல்

## 6.10 மாதிரி வினாக்கள்

1. உற்பத்தி அடக்கவிலை என்றால் என்ன? அதன் முக்கியத்துவத்தை விவரி? உற்பத்தி அடக்கவிலைக் கணக்கு முறைக்கு உட்பட்ட நிறுவனங்களை கூறுக.
2. அடக்கவிலை தொகுப்புச்சீட்டு அல்லது அடக்கவிலைப் பட்டியல் என்றால் என்ன? அதை எவடவாறுதயாரிப்பாய் எனடபதை விவரி
3. அடக்கவிலை பட்டியல் என்பதின் இலக்கணம் தந்து அதனுடைய நன்மைகளைக' கூறுக.
4. அடக்கவிலை பட்டியலுக்கும், அடக்கவிலைக் கணக்கிறகும் உள்ள வேறுபாட்டைவிவரி
5. அடக்கவிலைப்பட்டியல் மாதிரி ஓன்றைத் தயார் செய்க

குறிப்பு

6. கீழ்க்காணும் விவரங்களைக் கொண்டு 2006-ம் ஆகஸட் முடிய ஒரு அடக்கவிலைப் பட்டியல் தயார்டசெய்க.

| விவரம் | ரூ |
|---|---|
| நேரடி மூலப்பொருள்கள் | 12.00 |
| கூலி | 10,000 |
| தோழிற்சாலை வாடகை | 1.000 |
| இயந்திரம்மீத தேய்மானம் | 500 |
| தோழிற்சாலை தேய்பார்வை | 1,500 |
| மறைமுக மூலப்பொருள் | 200 |
| மறைமுக உழைப்பு | 300 |
| அலுவலகச் செலவு | 15,000 |
| மற்ற தொழிற்சாலைச் செலவுகள் | 500 |
| அலுவலகச் சம்பளம் | 1,800 |
| எழுபொருளும் அச்சுகோர்ப்பும் | 200 |
| நிர்வாகச் செலவுகள் | 2,500 |
| மொத்த உற்பத்தி அலகுகள் | 1,000 |

7. இவற்றைக் கொண்டு
அ. பிரதம அடக்கவிலை
ஆ. தொழிற்சாலை அடக்கவிலை
இ. ரொக்க அடக்கவிலை

ஈ.ஓர்அலகின் அடக்கவிலை ஆகியவற்றைக் கண்பிடி
விடை: (அ) ரூ22,000 (ஆ) 26,000 (இ) ரூ32,000 (ஈ) ரூ32

ரூ22,000

8.சுதேசி கம்பெனி அடக்கவிலைப் பேரேட்டிருக்கு பின்வரும் விவரங்கள் கொடுக்கப்பட்டுள்ளன. இவற்றைக் கொண்டு டிசம்பர்31.2006

(அ) நேரடி மூலப்பொருள் நுகர்வு (ஆ) பிரதம அடக்கவிலை

(இ) தொழிற்சாலை அடக்கவிலை (ஈ) மொத்த உற்பத்திசெலவு மற்று

| விவரம் | ரூ |
|---|---|
| சரக்கு இருப்பு நேரடி மூலப்பொருள் | 67,200 |
| மூலப்பொருள் கொள்முதல் | 2,59,000 |
| நிர்வாக சம்பளம் | 17,640 |
| வராக்கடன் | 9,100 |
| விற்பனையாளர் சம்பளமும் கழிவும் | 10,780 |
| அலுவலக மனைத்துணைப் பொருட்கள் மீது தேய்மானம் | 420 |
| தொழிற்சாலைச் சம்பளம் | 9,100 |
| வாகை வரி, காப்பீடு | 11,900 |
| உற்பத்திக்கூலி | 176,400 |
| இயக்குனர் செலவு | 8,4000 |
| பொதச் செலவுகள் | 4,760 |
| எரிபொருள்தண்ணீர் (தொழிங்சாலைக்கு) | 1,680 |
| பயணச் செலவும் | 2,940 |
| விற்பனை | 6.45.540 |
| மேவாளர் சம்பளம் (2/3தொழிற்சாலை: 1/3 நிர்வாகம்) | 1,680 |
| இயந்திரத்தின் மீது தேய்மானம் | 9,100 |
| ரேக்க தள்ளுபடி கொடுத்தது | 4,060 |
| கருவி பழுதுபார்த்த செலவு | 6,230 |
| வேளித் துாக்னுக் கூலி | 6,020 |
| நேரிடைச் செலவுகள் | 10,010 |
| வாடகை வரி காப்பிடு (அலுவலகம் ) | 2,800 |
| எரிபொருள் தண்ணீக் (அலுலகம் | 560 |
| நேரிடை மூவப்பொருள் சரக்கு இரப்பு (31.12.2006) | 87,920 |

விடை : (அ) ரூ2,38,280 (ஆ) ரூ 4,24,690 (அ ரூ4,72,700 (உ)ரூ 5,45,180 (ஊ) ரூ1,00,360

குறிப்பு

9.பின்வருன் விவரங்களைக் கருத்தில் கொண்டு ஒரு அடக்கவிலை குறிப்கு தயாரிக்கவும்

| | மூன்றுமாதம்முடிய | |
|---|---|---|
| | 31,03,2006 | 30,06,2006 |
| | ரூ | ரூ |
| உற்பத்திக்கூலி | 75,000 | 98,000 |
| நிர்வாக செலவும்கள் | 12,000 | 12,000 |
| நேரிடை மூலப்பொருள் | 39,000 | 49,000 |
| வாடகை வரி காப்பிடு (தொழிற்சாலைக்கு ) | 750 | 750 |
| ஒளியும் தண்ணீரும் | 1,000 | 1,000 |
| நேரிடைச் செலவு | 9.000 | 12,500 |
| தேய்மானம் | 2,000 | 1,000 |
| தொழிற்சாலை வாகை | 1,500 | 2,500 |
| தொழிற்சாலை பழுபார்க்கும் செலவு | 30,000 | 41,000 |
| தொழிற்சாலை பழுதுபார்க்கும் செலவு | 3,000 | 4,500 |
| | 1,67,250 | 2,22,250 |
| மொத்த உற்பத்தி அலகுகள் | 6,000 | 8,000 |
| | டன்கள் | டன்கள |

10. அடியிற்கண்ட விவரங்களிலிருந்து ஒரு அடக்கவிலை குறிப்பு தயாரிக்கவும் ஜீன்30-ம் தேதி முடிய

(விடை: மொத்த அடக்கவிலை 2005-க்கு ரூ 1,90,000-க்கு ரூ3,00,000)

| | ஜீன் 30-ம் | தேதி முடிய |
|---|---|---|
| | 2005 | 2006 |
| | ரூ | ரூ |
| உற்பத்திசெய்யப்பட்ட முற்றுப்பெற்ற பொருட்கள் | | |
| ஆரம்பத்தில் இருந்தது | 50,000 | 1,00,000 |
| இறுதியில் அருந்தது | 1,00,000 | 1,32,000 |
| நேரடி மூலப்பொருள் பயன்படுத்தப்பட்டடு | 1,00,000 | 1,60,000 |
| நேரடி உழைப்பு | 60,000 | 96,000 |
| மறைமுக உழைப்பு | 7,500 | 9,000 |
| பொருள் மின்சாரமும் | 11,000 | 17,500 |
| இயந்திரத்தின் மிது தேய்மானம் | 5,000 | 6,000 |
| பழுது பார்க்கும் செலவு | 3,500 | 6,500 |
| பற்பல தொழிற்சாலை உற்பத்திச் அசலவுகள் | 3,000 | 5,000 |

11. பின்வரும் விவரங்களைக் கொண்டும் தொலைக்காட்சி பெட்டி தயாரிக்கு நிறுவனம் ஒன்றக்ன 2006-ம் ஆண்டிற்கு ணுர் அடக்கவிலை பட்டியல் செய்க.

குறிப்பு

| விவரம் | ரு |
|---|---|
| நேரடி மூலப்பொள் வாற்கியது | 3,50,000 |
| நேரடி உழைப்பு | 4,20,000 |
| நேரடி செலவுகள் | 80,000 |
| தொழிற்சாலை வாடகை | 25,000 |
| தொழிற்சாலை சம்பளம் | 35,000 |
| உற்பத்தி மேலாளர் சம்பளம் | 84,000 |
| மற்ற தொழிற்சாலைச் செலவுகள் | 16,000 |
| தொழிற்சாலை ஒளி | 7,000 |
| தொழிற்சாலை மேற்பார்வை | 23,000 |
| சரக்கு இருப்பு ஜனவரி 1,2006: | |
| நேரடி மூலப்பொருள் | 1,50,000 |
| வேலை முற்றாப் பொருள் | 90,000 |
| சரக்கு இருப்பு டிசம்பர் 31.2006: | 1,00,000 |
| நேரடி மூலப்பொருள் | 50,000 |
| இயக்குநர்படி | 12,000 |
| சட்டமுறைச் செலவுகள் | 23,000 |
| அலுவலக செலவு | 10,000 |
| எழுதுபொருள் செலவு | 5,000 |
| உற்பத்தி செய்யப்பட்ட தொலைக்காட்சி பெடடிகள் | 500 |
| விலை: செய்யப்பட்ட தொலைக்காட்சி பெட்டிரு2,320 | |

குறிப்பு

# பாடம் - 7

# அடக்கவிலை மற்றும் நிதிக்கணக்குகளைச் சரிக்கட்டுதல்

**அமைப்பு**

7.0 அறிமுகம்

7.1 கற்றல் நோக்கங்கள்

7.2 அடக்கவிலை சரிகட்டுதலின் பொருள்

7.3 இலாபங்களில் வித்தியாசம் *(Disagreement)* ஏற்படக் காரணங்கள்

7.4 சரிக்கட்டுதல் முறை

7.5 அருஞ்சொற்கள்

7.6 தொகுப்புரை

7.7 உங்கள் முன்னேற்றத்தை சரிபார்க்கும் விடைகள்

7.8 மாதிரி வினாக்கள்

## 7.0 அறிமுகம்

பொதுவாக எல்லா நிறுவனங்களும் தங்களின் வியாபார நடவடிக்கைகள் மூலம் ஏற்பட்ட விளைவுகளான லாபம் அல்லது நட்டங்களை அறிவதற்கு கணக்கு ஏடுகளைபராமரிப்பார்கள். நிதிக் கணக்கியலின் லாப நட்டக் கணக்கு வாயிலாக இதனை அறியலாம். பொருள்களை உற்பத்தி செய்யும் நிறுவனங்கள் நிதிக் கணக்கியல் ஏடுகளோடு அடக்க விலையை கண்டறிய சில ஏடுகளைப் பராமரிக்கின்றனர். இவ்விரு ஏடுகளில் கண்டறியப்படும் லாபங்கள் ஒன்றோடு ஒன்று வேறுபடுவது உண்டு. இதனைச் சரிக்கட்ட பட்டியலைத் தயாரிப்பார்கள் இப்பாடப்பிரிவில், அடக்கவிலை சரிக்கட்டும் பட்டியலின் பொருள், அடக்கவிலை லாபம் நிதிக்கணக்கியியல் லாபமும் வேறுபடுவதற்கான காரணங்கள் மற்றும் அதனைச் சரிக்கட்டும் முறையைக் காண்போம்.

## 7.1 கற்றல் நோக்கங்கள்

- அடக்கவிலைச் சரிகட்டும் பட்டியலின் பொருளை அறியலாம்.
- அடக்கவிலைக் கணக்கியியல் லாபம் மற்றும் நிதிக் கணக்கியியல் லாபம் வேறுபடுதற்கான காரணங்களை ஆராயலாம்.
- அடக்கவிலைச் சரிக்கட்டம் பட்டியலைத் தயாரிக்கும் முறையை விளக்கலாம்.

## 7.2 அடக்கவிலை சரிகட்டுதலின் பொருள்

ஒரு பொருளுக்கு மட்டும் உற்பத்தி செய்யும் தொழில் நிறுவனங்கள் அடக்கவிலை கணக்குகளுக்கு தனியே ஏடுகள் ஏதும் வைத்திருப்பதில்லை. இங்கு அடக்கவிலை சம்பந்தப்பட்ட விவரங்களை நிதிகணக்கில் ஏடுகளிலிருந்து எடுத்துக்கொள்ளலாம். ஆனால் பெரிய நிறுவனங்களில் அடக்கவிலை கணக்கு ஏடுகள் முறை மற்றும் நிதி கணக்கு ஏடுகள் முறை என தனித்தனியே வைத்திருப்பதால் இக்கணக்கு ஏடுகள் காட்டும் இலபா நட்டங்கள் வேறுபடுகின்றன. எனவே அடக்கவிலை மற்றும் நிதிகணக்குகளை சரிகட்டுதல் மிக அவசியம். அடக்கவிலை மற்றும் நிதிக்கணக்கேடுகள் காட்டும் இலாபங்களைச் சரிக்கட்டுதலையே அடக்கவிலை மற்றும் நிதிக்கணக்குகளை சரிக்கட்டதல் *(Reconciliation of Cost and financial Accounts)*

குறிப்பு

என்கிறோம் இவ்வாறு சரிக்கட்டும்போது இரண்டு ஏடுகளின் இலபாபங்கள் ஒப்பிடப்படகிறது. இச்சரிக்கட்டல் முறை ஏறக்குறைய வங்கி கணக்குகளை சரிக்கட்டும் முறை போன்றதாகும் இச்சரிக்கட்டல் கீழ்க்கண்ட நோக்கங்களுக்காக செய்யப்படுகிறது.

1. அடக்கவிலைக் கணக்குகளின் பிழையின்மையைச் சோதித்தல்
2. இலாபங்களின் உள்ள வேபாட்டிற்கான காரணங்களைக் கண்டறிதல்

## 7.3 இலாபங்களில் வித்தியாசம் (*Disagreement) ஏற்படக் காரணங்கள்

இலாபங்களில் வித்தியாசம் ஏற்படுவதற்கான காரணங்கள் கீழே தரப்படடுள்ளன.

1. நிதிக்கணக்குகளில் மட்டும் காட்டப்படும் இனங்கள்

அடக்கவிலைக் கணக்குகளின் தோன்றாமல் நிதிக் கணக்குகளில் மட்டும் தோன்றும் பல இனங்கள் உள்ளன. அவ்வாறான செலவினங்கள் நிதி லாபத்தை அதிகரிக்கவோ அல்லது குறைக்கவோ செய்யலாம். ஆவைகளின் முக்கியமானவை கீழே தரப்பட்டுள்ளன.

**அ) முழுமையான நிதிச் செலவுகள்**

*i.* மூலதனச் சொத்துக்களின் நட்டம் *(Loss of Capital Assets )*

*ii.* பங்குகள் *(Shares)* கடன் பத்திரங்கள் *(Debenture)* முதலியவற்றை அளிக்கும்போது ஏற்படும் செலவுகள்

*iii.* அபராதங்கள் மற்றும் தண்டங்கள் *(Fines and Penalities)*

*iv.* கடன்களின் மீதான வட்டி

*v.* வரிகளுக்கான ஒதுக்கீடுகள் *(Provision for taxes)*

*vi.* தர்மகாரியங்ளுக்கான நன்கொடைகள்

*vii.* நன்மதிப்பு போக்கெழுதப்படல் *(goodwill written off)*

*viii.* முன்செலவுகள் போக்கெழுதப்படல் *(Preliminary expenses written off)*

ஆ) முழுமையான நிதி வருமானங்கள்

*i.* பெறப்பட வேண்டிய வாடகை (உள் வாடகை தவிர)

*ii.* சொத்தினை விற்பதில் லாபம்

*iii.* பங்கு மாற்றக் கட்டணம் முதலியன

*iv.* வங்கி இருப்புகளின் மீதான வட்டி முதலியன மற்றும்

*v.* பங்கு லாபம் *(Dividend Income)*

இ) லாபத்தினைப் பகிர்ந்தளித்தல் *(Appropriation of profits)*

1. கொடுக்கப்பட்ட பங்கு லாபங்கள் மற்றும்
2. நிதிகளுக்கும் *(Funds)* ஒதுக்கீடுகளுக்கும் *(Reserve)* மாற்றியவை.

2. அடக்கவிலை கணக்கில் மட்டும் காட்டப்படும் இனங்கள்

ஒரு சில இனங்கள் நிதிக்கணக்குகளில் காட்டபடாமல் அடக்கவிலைக் கணக்கில் மட்டும் காட்டப்படுகின்றன.

*i.* முலதனத்தின் மீதான வட்டி

*ii.* சொந்தக் கட்டிடத்திற்கான வாடகை *(Charge in lieu of rent for own premises)*

குறிப்பு

*iii.* முழுவதும் நிதிக் கணக்குகளின் குறைக்கப்பட்ட சொத்துக்களுக்கான தேய்மானச் செலவுகள்

**3.சரக்கு மதிப்பீட்டிற்கு கையாளப்படும் பல்வேறு அடிப்படைகள்**

நிதிக்கணக்குகில் வருடத் தொடக்கத்திலும் முடிவிலும் உள்ள சரக்குகள் அடக்கவிலை அல்லது சந்தைவிலை இவற்றில் எது குறைந்ததோ அதில் மதிப்பீடப்படுகிறது. ஆனால் அடக்கவிலை கணக்குளில் அடக்கவிலையில் மதிப்பீடபடுகின்றன.

**4.அடக்கவிலைக் கணக்குகளில் குறைவாக அல்லது அதிகமாக செயலமைப்புச் செலவுகளை கிரகித்தல்**

அடக்கவிலைக் கணக்குகளில் செயலமைப்ப செலவுகள் முன் நிர்ணயிக்கப்பட்ட விகிதங்களில் கிரகிக்கப்படுகின்றன. நிதிக்கணக்குகளின் உண்மையாக ஏற்பட்டவை மட்டமே கருத்தில் கொள்ளப்படுகின்றன. நிர்ணய அடிப்படையில் திரும்பப் பெறப்பட்ட *(recovered)* தொகையும் உண்மையில் ஏற்பட்ட தொகையும் ஒன்றாக இராது. கிரகித்தல் உண்மையானதைக் காட்டிலும அதிகமாக இருந்தால் அது அதிக கிரகித்தல் என்றும் உண்மையானதைக் காட்டிலும் குறைவாக இருந்தால் குறைந்த கிரகித்தல் என்றும் அறியப்படுகிறது.

**5. தேய்மானக் கணக்கீடுக்கான பல்வேறு அடிப்படைகள்**

நிதி மற்றும் அடக்கவிலை கணக்குகளில் சுமத்தப்படும் தேய்மானகளின் விகிதம் மற்றும் முறைகள் வேறுபடுமானால் தேய்மான அளவுகளில் வேறுபாடுகள் தோன்றுகின்றன.

அடக்கவிலை பற்றிய தகவலின் பிழையின்மையை உறுதி செய்யவும் லாப வித்தியாசங்களை விளக்கவும் இரண்டு வகையான இலாபங்களின் குறிப்பு அடிப்படையில் சரிக்கட்டுதல் பட்டியல் தயாரிக்கப்பட வேண்டும்

## 7.4 சரிக்கட்டுதல் முறை

இரண்டு வகையான கணக்கேடுகள் காட்டும் இலாபங்களை சரிகட்டி இலாபங்கள் வேறுபடுத்தலக்கான காரணங்களை கண்டறிய பின்வரும் முறையைப் பயன்டுத்த வேண்டும். உதாரணமாக அடக்கவிலைக் கணக்குகளின் இலாபத்திலிருந்து தொடங்கினால் அந்த இலாபத்தோடு

*i.* அடக்கவிலை கணக்குகளில் தோன்றாமல் நிதிக்கணக்குகளின் மட்டும் தோன்றும் இலாப இனங்களைக் கூட்ட வேண்டும் அதே நேரத்தில் இவ்வாறான செலவினங்களைக் கழிக்க வேண்டும்

*ii.* நிதிக்கணக்குகளின் காட்டப்படாமல் அடக்கவிலைக் கணக்குகளின் மட்டும் தோன்றும் இலாப இனங்களைக் கழித்துவிட்டு, இவ்வாறான செலவினங்களைக் கூட்ட வேண்டும்.

*iii.* நிதி மற்றும் அடக்கவிலை ஆகிய இரு ஏடுகளிலும் தோன்றினாலும் வெவ்வேறான தொகைகள் எழுதப்பட்டிருந்தால்

அ) நிதி கணக்குகளின் அதிகமாக எழுதப்பட்டுள்ள செலவுத் தொகையை கழிக்கவும்

ஆ) அடக்கவிலைக் கணக்குகளின் அதிகமாக எழுதப்பட்டுள்ள செலவுகளைக் கூட்டவும்

குறிப்பு

இ) அடக்கவிலைக் கணக்கியல் தொடக்கச் சரக்கிருப்பு அதிகமாக மதிப்பிடப்பட்டிருந்தால் அந்த அதிகத் தொகையை கூட்டவும் மாறாக தொடக்கச் சரக்கிருப்பு குறைவான மதிபிடப்பட்டிருந்தால் அக்குறைவுத் தொகையைக் கழிக்கவும்

ஈ) அடக்கவிலைக் கணக்கியலில் இறுதிச் சரக்கிருப்பு குறைவாக மதிப்பிடப்பட்டிருந்தால் அக்குறைவுத் தொகையைக் கூட்டவும் மாறாக இரு சரக்கிருப்பு மதிப்பிடப்பட்டிருந்தால் அந்த அதிகத்தொகையை கழிக்கவும்.

உ) அடக்க விலைக் கணக்கில் அதிகமான தேய்மானம் இருந்தால் அந்த அதிகத்தை இலாபத்தோடு கூட்டவும் தேய்மானம் குறைவாக இருந்தால் குறைவுத் தொகையை கழிக்கவும்

ஊ) செயலமைப்புச் செலவுகள் அதிகமாக கிரகிக்கப்பட்டிருதால் அடக்கவிலை கணக்கு இலதபத்தோடு அதிகத்தைக் கூட்டவும் மாறதாக குறைவாக கிரகிக்கப்பட்டிருந்தால் அதனைக் கழிக்கவும்

**இவ்வாறு அடக்கவிலை கணக்கு இலாபத்தோடு சில இனங்களைக் கூட்டியும் குறைத்தும் நிதிக்கணக்கியல் இலாபம் கணக்கிடவேண்டும் சரிக்கட்டும் பட்டியலின் மாதிரி பின்வருமாறு**

**சரிகட்டும் பட்டியல்**

| | | ரூ |
|---|---|---|
| அடக்கவிலை கணக்குகளின் படியான இலாபம் | | |
| கூட்டு | | |
| 1. நிதிக்கணக்கியல் மட்டும் உள்ள இலாபங்கள் | | |
| 2. அடக்கவிலை கணக்கியல் மட்டும் உள்ள செலவினங்கள் | | |
| 3. அடக்கவிலை கணக்கியல் அதிகமாக மதிப்பிட்ட தொடக்க சரக்கிருப்பு | | |
| 4. அடக்கவிலை கணக்கில் குறைவாக மதிப்பிடப்பட்ட இறுதிச் சரக்கிருப்பு | | |
| 5. அடக்கவிலை கணக்கில் அதிகமாக எழுதப்பட்ட தேய்மானம் | | |
| 6. அதிகமாக கிரகிக்கப்பட்ட செயலமைப்புச் செலவு | | |
| கழி | | |
| 1. நிதிக்கணக்கில் மட்டும் உள்ள செலவினங்கள் | | |
| 2. அடக்கவிலைக் கணக்கில் மட்டும் உள்ள இலாபங்கள் | | |
| 3. அடக்கவிலைக் கணக்கில்குறைவாக மதிப்பிடப்பட்ட தொடக்க சரக்கிருப்பு | | |
| 4. அடக்கவிலை கணக்கில் குறைவாக மதிப்பிடப்பட்ட இறுதி சரக்கிருப்பு | | |
| 5. அடக்கவிலை கணக்கில் குறைவாக எழுதப்பட்ட தேய்மானம் | | |
| 6. குறைவாக கிரகிக்கப்பட்ட செயலமைப்புச் செலவுகள் நிதிக்கணக்குகளின் படியான இலாபம் | | |

**எடுத்துக்காட்டு :1** ஒரு நிறுமத்தின் அடக்கவிலை கணக்குகளின் படிான இலாபம் ரூ 46,126. ஆனால் நிதிக்கணக்குகளின் படியான இலாபம் ரூ33,248 கீழ்க்கணடவிவரங்களைக் கொண்டு இரண்டு இலாபங்களைச் சரிகட்டும் பட்டியலைத் தயாரிக்கவும்.

குறிப்பு

**இலாப- நட்டக் கணக்கு**

**2006 மார்ச் 31 தேதியோடு முடியும் ஆண்டிற்கு**

| | | | |
|---|---|---|---|
| தொடக்க சரக்கிருப்பு | 1,64,308 | விற்பனை | 6,93,000 |
| கொள்முதல் | 4,94,358 | இறுதி சரக்கிருப்பு | 1,50,242 |
| நேரடி கூலி | 46,266 | | |
| ஆலை செயலமைப்புச் செலவுகள் | 41,652 | | |
| மொத்த இலாபம் | 96,658 | | |
| | 8,43,242 | | 8,43,242 |
| நிர்வாகச் செலவுகள் | 19,690 | மொத்த இலாபம் | 96,658 |
| விற்பனைச் செலவுகள் | 44.352 | இதர வருமானம் | 632 |
| நிகர இலாபம் | 33,248 | | |
| | 97,290 | | 97,290 |

**அடக்கவிலை கணக்கு ஏடுகளின்படி**

1. இறதிச் சரக்கிருப்பு -ரூ1,56,394
2. இந்த ஆண்டு கிரகிக்கப்பட்ட நேரடிக் கூலி ரூ.49,734
3. கிரகிக்கப்பட்ட ஆலை செயலமைப்புச் செலவுகள் ரூ 39,428
4. நிர்வாகச் செலவுகள் விற்பனையில் *3%*ஆகும.
5. விற்பனைச் செலவுகள் விற்பனையில் *5%* ஆகும்
6. இதர வருமானங்கள் பற்றிகுறிப்பு இல்லை.

**தீர்வு**

| | | |
|---|---|---|
| அடக்கவிலை கணக்குகளின்படி இலாபம் | | 46,126 |
| கழி | | |
| இறுதிச்சரக்கிருப்பின் அதிகமதிப்பு (1,56,394 - 1,50,242) | 6,152 | |
| குறைவாக கிரிகிக்கப்பட்ட ஆலை செயலமைப்புச் செலவுகள் (41,652-39,428) | 2,224 | |
| விற்பனை செலவுகள் குறைவாக கிரகிக்கப்பட்டது (45,432-34,650) | 9,702 | 18,078 |
| கூட்டு | | 28,048 |
| அதிகமாக கிரகிக்கப்பட்ட கூலி (49734-46266) | 3,468 | |
| அதிகமாக கிரகிக்கப்பட்ட நிர்வாகச் செலவுகள் (20,790-19,690) | 1,100 | |
| இதர வருமானங்கள் | 632 | 5,200 |
| நிதிக் கணக்குகளின்படி இலாபம் | | 33,248 |

குறிப்பு

**எடுத்தக்காட்டு:2**

ஜெய நிறுமத்தின் 2006ம் ஆண்டிற்கான இலாப நட்டக் கணக்கு பின்வருமாறு

| | | | |
|---|---|---|---|
| கச்சாப் பொருட்கள்<br>கூலி<br>ஆலைச் செலவுகள்<br>நிர்வாகச் செலவுகள்<br>விற்பனச் வெலவுகள் | 54,80,000<br>30,20,000<br>16,60,000<br>7,62,000<br>9,00,000 | விற்பனை (24000பொரட்கள்<br>முடிவுப் பொருட்கள்(8000)<br>முடிவடையாப் பொருட்கள்<br>வேலை ரூ | 1,20,00,000<br>3,20,000 |
| தொக்கச் செலவுகள் | 80,000 | கச்சாப்பொருட்கள் 128000<br>கூலி 72000 | |
| நன்மதிப்பு<br>(நீக்கப்பட்டது)<br>நிகர இலாபம் | 40,000<br><br>6,53,200 | ஆலைச் செலவுகள் 40000<br><br>இலாப ஈவு பெற்றுது | <br><br>2,40,000<br>36,000 |
| | 1,25,9600 | | 1,25,9600 |

**அடக்கவிலை கணக்கு ஏடுகளின்படி**

1. பிரதான அடக்கவிலையில் 20 சதவீதம் ஆலைச்செலவு என கணக்கிடப்பட்டது
2. உற்பத்தியான பொருட்கள் ஒவ்வொன்றிற்கும் ரூ3.00 நிர்வாக செலவு கணக்கிடப்பட்டது
3. விற்பனையான பொருள் ஒன்றுக்கு ரூ 4.00 விற்பனை செலவு ஆகும் நிறுமத்தின் அடக்கவிலை இலாப நட்டக் கணக்கை தயாரித்து நிதிக்கணக்கும் காட்டும் இலாபத்தோடு சரிககட்டவும்

**தீர்வு**

அடக்கவிலைக் கணக்கியலில்

ஆலைச் செலவுகள் = பிரதான அடக்கவிலை ரூ 8,50,00,000

*(54,80,000= 30,20,000)* த்தில் *20%* = ரூ17,00,000

நிர்வாகச் செலவுகள் = ரூ *3x2,48,000(2,40,000+ 8,000)* = ரூ 7,44,000

விற்பனைச் செலவுகள் = ரூ *4x2,40,000* = ரூ. *9,60,000*

**அடக்கவிலை இலாப- நட்டக் கணக்கு**

| | | | |
|---|---|---|---|
| கச்சாப் பொருட்கள் | 54,80,000 | விற்பனை | 1,20,00,000 |
| கூலி | 30,20,000 | முடிவுப் பொருட்கள் | 3,20,000 |
| ஆலைச் செலவுகள் | 17,00,000 | முடிவடையாப் வேலை | 2,40,000 |
| நிர்வாகச் செலவுகள் | 7,44,000 | | |
| விற்பனைச் செலவுகள் | 9,60,000 | | |
| நிகர இலாபம் | 6,56,000 | | |
| | 1,25,60,000 | | 1,25,60,000 |

குறிப்பு

**சரிக்கட்டும் பட்டியல்**

| | | |
|---|---|---|
| அடக்கவிலை கணக்குகளின்படி இலாபம் | | 6,56,000 |
| கூட்டு அடக்கவிலையை பாதிக்காத இலாப ஈவு பெற்றது | | 36,000 |
| | | 6,92,000 |
| கழி: | | |
| அடக்கவிலையில் சேராத செலவுகள் தொடக்கச் | 80,000 | |
| செலவுகள் நன்மதிப்பு நீக்கியது | 40,000 | |
| | | 1,20,000 |
| | | 572000 |
| **கூட்டு** : அதிகமாக கிரகிக்கப்பட்ட | | |
| 1. ஆலைச் செலவுகள் (1,70,00,000-16,60,000) | 40,000 | |
| 2. விற்பனைச் செலவுகள் (9,60,000- 9,00,000) | 60,000 | |
| | | 1,00,000 |
| கழி: குறைவாக கிரகிக்கப்பட்ட | | 6,72,000 |
| நிர்வாக செலவுகள் (762800-744000 | | 18,800 |
| நிதிக் கணக்குகளின்படி இலாபம் | | |
| | | 6,53,200 |

**எடுத்துக்காட்டு:3**

டிசம்பர் 31 முடிய எஸ் லிமிடெட்டின் உற்பத்தி வர்த்தக லாப நட்ட பகிர்ந்தளிப்பு கணக்குகள் கிழே தரப்பட்டுள்ளன.

குறிப்பு

| | | | | |
|---|---|---|---|---|
| | ரூ | | | ரூ |
| கச்சாப்பொருட்கள் | | | வர்த்தக க/கு உற்பத்திப் பொருட்களில் அடக்கவிலை மாற்றப்பட்டது | 3,45,000 |
| ஆரம்பச்சரக்கு | 30,000 | | | |
| வாங்குகல்கள் | 1,40,000 | | | |
| கழி: இறுதிச் சடங்கு | 170,000 | 1,40.000 | | |
| | 30,000 | | | |
| நேரடிக் கூலி | | 1,20,000 | | |
| பிரதமஅடக்கவிலை | | 2,60,000 | | |
| உற்பத்திசெயலமைப்பு செலவு | | 80,000 | | |
| மொத்ததொழிற்சாலை அடக்கவிலை *Gross work Costs* ) | | 40,000 | | 3,45,000 |
| கூட்டு : முன்னேற்றத்திலுள்ள வேலைகள் இறுதிச்சரக்கு | 25,000 | | | |
| கழி: ஆரமபச்சரக்கு | 20,000 | 5,000 | | |
| | | 3,45,000 | | 3,45,000 |
| முடிக்ககப்பட்டபொருட்கள் | | | விற்பனை | 5,00,000 |
| ஆரம்பச் சரக்கு | 21,000 | | | |
| உற்பத்திசெய்யப்பட்ட பொருட்கள் | 3,45,000 | | | |
| | 3,66,000 | | | |
| கழி: இறுதிச் சரக்கு | 23,000 | 3,43,000 | | |
| மொத்தலாபம் கொ/செ | | 1,57,000 | | |
| | | 5,00,000 | | 5,00,000 |
| நிர்வாகச் செலவுகள் | | 60,000 | மொத்த இலாபம் கொ/வ | 1,57,000 |
| விற்பனைச் செலவுகள் | | 25,000 | பெறப்பட்ட இலாபம் | 2,000 |
| விநியோகச் செலவுகள் | | 15,000 | வங்கியிருப்பின் மீதாகவட்டி | 1,000 |
| தளவாடத்தை விற்றதில் நட்டம் | | 1,500 | | |
| அபராதங்கள் | | 500 | | |
| அடமானத்தின் மீதானவட்டி | | 1,000 | | |
| வருடநிகர இலாபம் | | 57,000 | | |
| | | 1,60,000 | | 1,60,000 |
| வரி | | 25,000 | இருப்புகொ/வ | 63,000 |
| பொதுஒதுக்கீடு(*General Reserve*) | | | | |
| சாதாரணப் பங்குலாபம் | | 10,000 | வருடநிகரலாபம் | 57,000 |
| நன்மதிப்புகுறைவு(*Goodwill written off* | | 5,000 | | |
| இருப்புகொ/செ | | 50,000 | | |
| | | 1,20,000 | | 1,20,000 |

அடக்கவிலைக் கணக்குகள் ரூ48,000 லாபத்தைக் காட்டுகின்றன. அவற்றில் சரக்குகள் கீழ்க்கண்டவாறு மதிக்கப்பட்டுள்ளன.

குறிப்பு

| | ஆரம்பச் சரக்கு | இறுதிச்சரக்கு |
|---|---|---|
| | ரூ | ரூ |
| கச்சாப் பொருட்கள் | 29,.000 | 31,000 |
| முன்னேற்றத்திலுள்ள வேலைகள் | 21,000 | 24,000 |
| அடக்கவிலைக் கணக்குகளின் கிரகிக்கப்பட்ட உற்பத்தி செயலமைப்புச்செலவு | | 84,000 |
| அடக்கவிலைக் கணக்குகளில் கிரகிக்கப்பட்ட நிர்வாகச் செயலமைப்புச்செலவு | | |
| ஆடக்கவிலைக் கணக்குகளில்கிரகிக்கப்பட்ட விற்பனை மற்றும் விநியோக செயலமைப்புச்செலவு | | 35,000 |
| அடக்கவிலைக் கணக்குகளில் பற்றாக்கப்பட்ட சொந்தக் கட்டிட வாடகை | | 6,000 |

சரிப்படுத்தலக்கான பட்டியல் தயார் செய்க.

**தீர்வு**

**குறிப்பு அடிப்படையில் சரிப்படுத்துதல் (ஆநஅழசயனெரஅ சுநஉழெஉடையைவழைெ யுஉ உ ழுரவெ)**

| | | | | |
|---|---|---|---|---|
| அடக்கவிலைக் கணக்கியல் சுமத்தப்படாத இனங்கள் | | | அடக்கவிலைக் கணக்குகளின்படி லாபம் | |
| தளவாடங்கள் விற்றதில் நட்டம் | 1,500 | | அடக்கவிலைக் கணக்குகளின வரவு வைக்கப்படாத இனங்கள் | |
| ஆபராதங்கள் | 500 | | | |
| வட்டி | 1,000 | 3000 | பெறப்பட்ட பங்குலாபம் | 2000<br>1000 |
| இருப்புச் சரக்குகளில் வித்தியாசம் | | | | |
| கச்சாப் பொருட்கள் | | | இருப்பு சரக்குகளில் வித்தியாசம் | |
| ஆரம்பம் | | | ஆரம்பம் | 1,000 |
| இறுதி | 1,000<br>1,000 | | இறுதி | 1,000 |
| | | 2,000 | | |
| முடிக்கப்பட்ட சரக்குகள் | | | அதிகமாக கிரகிக்கப்பட்ட செயலமைப்பச் செலவு: | |
| ஆரம்பம் | 1,000 | | | |
| இறுதி | 1,000 | 2,000 | உற்பத்திசெயலமைப்பு செலவு | 4,000 |
| | | | நிர்வாக செயலமைப்பு செலவு | 6,000 |
| குறைவாகக் கிரகிக்கப்பட்ட செயலமைப்புச் செலவு விற்பனைமற்றும் விநியோக | | | அடக்கவிலைக் கணக்குகளில் | |
| பொதுச் செலவு | | 5,000 | மட்டும் பற்று வைக்கப்பட்ட ஆடக்கவிலை வாடகை | |
| நிதிக்கணக்குகளின்படி நிகர லாபம் | | 57,000 | | |
| | | 69,000 | | |

## 7.5 அருஞ்சொற்கள்

குறிப்பு

| | | |
|---|---|---|
| **ஊக செலவுகள்** | : | அடக்கவிலையைக் கண்டறிய சில செலவுகள் செலவழிக்காமலே, செலவாக சேர்த்துக் கொள்ளப்படுவது. (எ.டு) சொந்தக் கட்டிடத்திற்கு வாடகை சேர்ப்பது. |
| **செயலமைப்பு செலவுகளை கிரகித்தல்** | : | அடக்கவிலைக் கணக்கியல் முறையில் சில செலவுகள் உத்தேசமாக நிர்ணயிக்கப்பட்டு கணக்கில் எடுத்துக் கொள்ளப்படும். எடுத்துக்காட்டாக உற்பத்தி செயலமைப்பு செலவு நேரடி உழைப்பில் 20 சதவீதம். |

## 7.6 தொகுப்புரை

அடக்கவிலை கணக்கியியல் லாபத்திற்கும் நிதிக் கணக்கியியல் லாபத்திற்கும் வேறுபாடுகள் வருவதுண்டு. இவ்வேறுபாடுகளைக் களைய அடக்கவிலை சரிக்கட்டும் பட்டியல் தயாரிக்கப்படுகின்றது. தேய்மானம் கணக்குகளும் முறை மாறுதல், சரக்கு மதிப்பீட்டில் மாறுதல், நிதி இவைகளை நிதிக்கணக்கியலில் மட்டும் சேர்த்தல், செயலமைச்செலவுகளை கிரகித்தல் முறையில் சேர்த்தல் போன்ற பல்வேறு காரணங்களால் அடக்கவிலை கணக்கியியல் லாபமும், நிதிக் கணக்கியியல் லாபமும் வேறுபடுகின்றன.

## 7.7 உங்கள் முன்னேற்றத்தை சரிபார்க்கும் விடைகள்

**I.** அ. 3 ஆ. 3 இ. 1 ஈ.1

## 7.8 மாதிரி வினாக்கள்

1. நிதிக்கணக்குகளைச் சரிக்கட்டல் என்றால் என்ன? இவ்விரு கணக்குகள் காட்டும் இலாபங்கள் வேறுபடுவதற்கான காரணங்கள் யாவை?

2. அடக்கவிலை மற்றும் நிதிக்கணக்குகள் காட்டும் இலாபங்கள் வேறுபடுவதற்கான காரணங்களைக் கூறும் அந்த இலாபங்களை சரிக்கட்டும் முறையை விளக்குக.

3. பாலன் நிறுமத்தின் நிதிக் கணக்குகளின் படியான இலாபம் ரூ2,57,510 அடக்கவிலை ணக்குகளின் படியான இலாபம் ரூ 3,44,800 இவ்விரு இலாபங்களைச்சரிக்கட்டும் போது கீழ்க்கண்ட வித்தியாசங்கள் கண்டுபிடிக்கப்பட்டது.

குறிப்பு

| | |
|---|---|
| குறைவாக கிரகிக்கப்பட்ட ஆலை செயலமைப்பச் செலவு | ரூ6,240 |
| அதிகமாக கிரகிக்கப்பட்ட அலுவலக செயலமைப்புச் செலவு | ரூ3,400 |
| நிதிக்கணக்குகளின்படி தேய்மானம் | ரூ22,400 |
| அடக்கவிலைக் கணக்குகளின்படி தேய்மானம் | ரூ25,000 |
| அடக்கவிலைக் கணக்குகளில் எழுதப்படாத முதலீடுகளின் மீதான இலாபம் | ரூ16,000 |
| நிதிக் கணக்குகளில் எழுதப்பட்ட நட்டம் | ரூ11,400 |
| வருமான வரி | ரூ8,600 |
| வட்டி மற்றும் இலாப ஈவு பெற்றது | ரூ2,450 |
| நிதிக் கணக்குகளில் சரக்கிருப்பில் ஏற்பட்ட தேய்மானத்தால் நட்டம் | ரூ13,500 |

மேற்கூறிய இரண்டு இலாபங்களைச் சரிக்கட்டி சரிக்கட்டும்பட்டியல் தயார் செய்யவும்

4.கீழ்க்கண்ட விவரங்களிலிருந்து

அ) அடக்கவிலை இலாபத்தை காட்டும் பட்டியல்

ஆ)இலாப நட்டக் கணக்கு மற்றும்

இ)சரிகட்டும்பட்டியல் ஆகியவற்றைத் தயாரிக்கவும்

| விவரங்கள் | ரூ |
|---|---|
| கச்சாப் பொருட்கள் | 14,600 |
| கூலி | 43,200 |
| ஆலை செயலமைப்பச் செலவுகள் | 22,840 |
| அலுவலக செயலமைப்புச் செலவுகள் | 12,420 |
| விற்பனை | 88,400 |

கூலிமீது 100சதுவீதம் ஆலை செயலவுகள் என கணக்கிட்ப்பட்டது. ஆலை அடக்கவிலையில் 20சதவீதம் அலுவலகச் செலவுகள் என கணக்கிடப்பட்டது.

5.மார்டன் நிறுமத்தின் 2006-ம் ஆண்டிற்கான இலாப நட்டக் கணக்கு பின்வருமாறு.

| | | | | |
|---|---|---|---|---|
| கச்சாப் பொருட்கள் | 1,39,600 | விற்பனை (12.000பொருட்கள்) | | 4,80,000 |
| நேரடி கூலி | 76,200 | | | |
| ஆலைச் செயலமைப்புச் செலவுகள் | 42,600 | இறுதி சரக்கிருப்பு (200பொருட்கள்) | | 8,000 |
| நிர்வாகச் செலமைப்புச் செலவுகள் | 39,100 | | | |
| விற்பனைச் செலவுகள் | 42,700 | கச்சாப்பொருட்கள் | 28,206 | |
| தொடக்கச் செலவுகள் | 2,200 | கூலி 11,790 | | |
| நன்மதிப்புநீக்கியது | 2,501 | ஆலைசெயலமைப்பு | | |
| இலாப ஈவு | 3,000 | செலவுகள் | 7,999 | |
| வருமான வரி | 4,100 | | | 47,995 |
| நிகர இலாபம் | 1,89,994 | வட்டி பெற்று | | 6,000 |
| | 5,41,994 | | | 5,41,995 |

**அடக்கவிலை கணக்கேடுகளின்படி**

குறிப்பு

1. பிரதான அடக்கவிலையில் 20சதவீதம் ஆலைச் செலவுகள என கணக்கிடப்பட்டது.

2. உற்பத்தியான பொருட்கள் ஒவ்வொன்றிற்கும் ரூ3.00 நிர்வாகச் செலவு கணக்கிடப்பட்டது

3. விற்பனையான பொருள் ஒன்றுக்கு ரூ4.00 விற்பனைச் செலவு ஆகும். நிறுமத்தின் அடக்கவிலை இலாப நட்டக் கணக்கினைத் தயாரித்து நிதிக்கணக்கு காட்டும் இலாபத்தோடு சரிக்கட்டவும்.

குறிப்பு

# பாடம் - 8
# ஒப்பந்த அடக்கவிலை கணிப்பு
# (CONTRACT COSTING)

**அமைப்பு**

8.0 அறிமுகம்

8.1 கற்றல் நோக்கங்கள்

8.2 ஒப்பந்த அடக்கவிலையின் பொருள்

8.3 சிறப்புத் தன்மைகள்

8.4 ஒப்பந்தத்தின் அடக்கவிலையினைப் பதிவு செய்தல்

8.4.1 பொருட்கள்

8.4.2 உழைப்பு

8.4.3 செலவுகள்

8.4.4 மறைமுக அடக்கவிலைகள்

8.4.5 இயந்திரம் மற்றும் தளவாடங்கள்

8.4.6 துணை – ஒப்பந்தம்

8.4.7 மிகை வேலை *(Extra Work)*

8.4.8 நிலுவைச் செலவுகள் *(outstanding Accrued charged)*

8.4.9 ஒப்பந்தத்தின் மதிப்பு மற்றும் லாபத்தைப் பதிவு செய்தல்

8.4.10 சான்றளிக்கப்பட்ட வேலை *(Work Certificate)*

8.4.11 சான்றளிக்கப்படாத வேலை *(work- not Certificate)*

8.5 அடக்கவிலை கூட்டல் ஒப்பந்தங்கள் *(Cost Plus contracts)*

8.6 விலை உயர்வுக்கான சரத்து *(Excalation Clause)*

8.7 பிடித்து வைத்த பணம் *(Rentention Money)*

8.8 இருப்பு நிலைக் குறிப்பில் காட்டுதல்

8.9 அருஞ்சொற்கள்

8.10 தொகுப்புரை

8.11 உங்கள் முன்னேற்றத்தை சரிபார்க்கும் விடைகள்

8.12 மாதிரி வினாக்கள்

## 8.0 அறிமுகம்

அடக்கவிலை கணிப்பு முறையில், பணி அடக்கவிலை, வழிமுறை அடக்கவிலை, உற்பத்தி அடக்கவிலை போன்ற பல்வேறு அடக்கவிலை கணிப்புமுறைகளைப் பார்த்தோம் பணி அடக்கவிலை கணிப்பு முறையானது கொடுக்கப்பட்ட ஆணையின் கீழ் ஒரு பணியை செய்து முடிப்பதற்கு ஆகும். பணி அடக்கவிலை கணிப்பும் ஒப்பந்த அடக்கவிலை கணிப்பும் ஏறத்தாழ ஒன்றேதான். பணி அடக்கவிலைக் கணிப்பில் அடக்கவிலை அலகு சிறியதாகவும், ஒப்பந்த அடக்கவிலைப் அலகு பெரியதாகவும் இருக்கும். எனவே தான் “பணி என்பது ஓர் சிறிய ஒப்பந்தம் என்றும் ஒப்பந்தம்

குறிப்பு

என்பது ஓர் பெரிய பணி" என்றும் கூறுவர். ஒப்பந்த பணி என்பது தொழிற்சாலைக்கு வெளியில் நடை பெறுவது. இப்பாடப்பிரிவில், ஒப்பந்த அடக்கவிலைக் கணிப்பின் தன்மைகள், அடக்கவிலைக் கண்டறியும் முறைகள் ஒப்பந்தங்களின் வகைகள் ஆகியவற்றைக் காண்போம்.

## 8.1 கற்றல் நோக்கங்கள்

- ஒப்பந்த அடக்கவிலை கணிப்பை விளக்க முடியும்.
- ஒப்பந்த வகைகளை பட்டியலிடலாம்.
- ஒப்பந்த பணியில் ஏற்படும் லாபம் மற்றும் நட்டங்களைக் கணக்கிடலாம்.

## 8.2 ஒப்பந்த அடக்கவிலையில் பொருள்

ஒப்பந்தம் என்பது ஒரு பெரிய பணியாகும். அதனால் பணி அடக்கவிலை கணிப்பு முறையின் கொள்கைகள் இதில் பயன்படுத்தப்படுகின்றன. இம்முறை ஒவ்வொரு ஒப்பந்தத்தின் அடக்கவிலையையும் தனியாக நிா்ணயிக்க உதவுகிறது. ஓப்பந்த அடக்கவிலை கணிப்பு முறையில் பெரும்பாலான அடக்கவிலைகள் ஒப்பந்தத்திற்கு நேரடி அடக்கவிலைகளாக ஒதுக்கபடுகின்றன.

## 8.3 சிறப்புத் தன்மைகள்

ஒப்பந்த அடக்கவிலைக் கணிப்பின் சிறப்புத் தன்மைகள் கீழே தரப்பட்டுள்ளன.

1. அடக்கவிலையானது பொதுவாக அதிகமாக இருக்கும்
2. ஒப்பந்தக் காலம் கணிசமானதாக ஒன்று அல்லது அதற்கு மேற்பட்ட வருடங்களாக இருக்கும்.
3. ஒப்பந்தங்கள் பொதுவாக ஒப்பந்தம் அளித்தவா்களின் *(contractees)* இடத்திலேயே நிறைவேற்றப்படுகின்றன.
4. ஒப்பந்தத்தில் ஏற்படும் அனைத்துச் செலவுகளும் பெரும்பாலும் நேரடி அடக்கவிலைகளேயாகும்.

## 8.4 ஒப்பந்தத்தின் அடக்கவிலையினைப் பதிவு செய்தல்

ஒவ்வொரு ஒப்பந்தத்துக்கும் தனியான எண்கள் கொடுக்கபட்டு அவவொப்பந்தத்தில் ஏற்படும் செலவுகள் அனைத்தும் அந்த எண்ணின் அடிப்படையில் பதியப்படுகின்றன.

### 8.4.1 பொருட்கள்

1. கொள்முதல் செய்யப்பட்டு நேரடியாக ஒப்பந்தத்துக்கு அளிக்கப்பட்ட பொருட்கள் ஒப்பந்த கணக்கில் பற்று வைக்கப்படுகின்றன.
2. பொருள் மாறுதல் குறிப்பின் அடிப்படையில் அடுத்த ஒப்பந்தத்துக்கு மாற்றப்பட்ட பொருட்கள் ஒப்பந்த கணக்கில் வரவு வைக்கப்படுகின்றன.
3. கணக்குக் காலத்தில் (*accounting period*) இறுதியில் இருப்பிடத்திலுள்ள (*at site)* பயன்படுத்தப்படாத சரக்கு ஒப்பந்த கணக்கில் வரவு வைக்கப்படுகிறது.
4. பொருளினைத் திருப்புதல் குறிப்பின் அடிப்படையில் திருப்பப்பட்ட பொருட்கள் ஒப்பந்த கணக்கில் வரவு வைக்கப்படுகிறது.

குறிப்பு

### 8.4.2 உழைப்பு

ஒரு குறிப்பிட்ட ஒப்பந்தத்தில் நியமிக்கப்பட்ட அனைத்துத் தொழிலாளரின் கூலிகளும் ஒப்பந்த கணக்கில் பற்று வைக்கப்படுகின்றன. தொழிலாளர்கள் ஒரு ஒப்பந்தத்தில் இருந்து மற்றொன்றுக்குச் செல்லும் போது நேர அட்டைகள் *(time sheets)* வைக்கப்பட்டு மொத்தக் கூலியானது ஒப்பந்தங்களில் செலவழிக்கப்பட்ட நேரங்களின் அடிப்படையில் பகிர்ந்தளிக்கப்பட வேண்டும்.

### 8. , செலவுகள்

துணை ஒப்பந்தக்காரர் கட்டணங்கள் *(subcontractor charges)* எந்திரத்தளவாடங்களின் வாடகைக் கட்டணங்கள் முதலியன போன்ற செலவுகள் அவை ஏற்பட்டபோது சம்பந்தப்பட்ட ஒப்பந்தத்தில் சுமத்தப்பட வேண்டும்.

### 8.4.4 மறைமுக அடக்கவிலைகள்

ஒரு சில அடக்கவிலைகள் நேரடியாக ஒப்பந்தங்களில் சுமத்தப்பட முடியாதவை. அந்த அடக்கவிலைகளின் பல்வேறு ஒப்பந்தங்களால் பகிரப்பட்டிருக்கலாம். எனவே, அவை பொருத்தமான அடிப்படையில் பல்வேறு ஒப்பந்தங்களில் பகிர்ந்தளிக்கப்பட வேண்டும் (உதாரணம்) தலைமை அலுவலச் செலவுகள், மத்திய கிடங்கச் செலவுகள் முதலிய மறைமுக அடக்கவிலைகளாகும்.

### 8.4.5 இயந்திரம் மற்றும் தளவாடங்கள்

ஒப்பந்தத்தில் பயன்படுத்தப்பட்ட எந்திரம் மற்றும் தளவாடங்கள் கீழ்க்கண்ட வழிகளில் கையாளப்படலாம்.

1. ஒப்பந்தத்துக்கு தளவாடத்தை அளிக்கும்போது அதன் முழு மதிப்பில் ஒப்பந்தக் கணக்கு பற்று வைக்கப்படுகிறது. தளவாடம் மற்ற ஒப்பந்தத்துக்கு மாற்றப்படும் போதோ அல்லது கணக்குக் காலத்தின் முடிவிலோ தளவாடத்தின் தேய்மானம் குறைக்கப்பட்ட மதிப்பு ஒப்பந்தக் கணக்கில் வரவு வைக்கப்படுகிறது.

அல்லது

2. எந்திரம் மற்றும் தளவாடங்களில் தேய்மானத்துடன் ஒப்பந்தக் கணக்கு பற்று வைக்கப்படுகிறது.

### 8.4.6 துணை – ஒப்பந்தம்

முதன்மை ஒப்பந்தக்காரரால் துணை ஒப்பந்தக்காரருக்கு அளிக்கப்பட்டது முதன்மை ஒப்பந்தத்தின் நேரடி அடக்கவிலையாகும்.

### 8.4.7 மிகை வேலை (Extra Work)

ஒப்பந்தம் அளித்தவரின் வேண்டுதலின் பேரில் சில மிகை வேலைகள் ஒப்பந்தக்காரரால் செய்யப்படுகின்றன. மிகை வேலைகளின் செலவழிக்கப்பட்ட தொகையானது ஒப்பந்தத்திலிருந்து தனியாக இருக்க வேண்டும். அந்த வேலைக்காகப் பெறப்பட்ட தொகையானது முதன்மை ஒப்பந்தக் கணக்கில் வரவு வைக்ககப்படக்கூடாது.

### 8.4.8 நிலுவைச் செலவுகள் (Outstanding Accrued Charges)

கணக்குக் காலத்தின் இறுதியில் எல்லா நிலுவைச் செலவுகளும் ஒப்பந்தக் கணக்குக்கு பற்று வைக்கப்பட்டு, கொடுக்கப்பட வேண்டிய செலவுகள் கணக்கில் வரவு வைக்கப்பட வேண்டும்.

### 8.4.9 ஒப்பந்தத்தின் மதிப்பு மற்றும் லாபத்தைப் பதிவு செய்தல்

பொதுவாக ஒப்பந்தமானது பல வருடங்களுக்குத் தொடர்வதால் ஒவ்வொரு கணக்கு வருடத்திலும், வேலையானது முன்னேற்றத்தில் உள்ள போது, லாபம் கணக்கிடுவது என்பது தீர்க்கப்பட வேண்டிய ஒரு பிரச்சினையாகும். செய்யப்பட்ட வேலையின் மதிப்புக்கும் அதன் அடக்கவிலைக்கும் உள்ள வேறுபாடு அக்காலத்திற்குரிய ஒப்பந்தத்தின் லாபமாகும்.

குறிப்பு

### 8.4.10 சான்றளிக்கப்பட்ட வேலை (Work Certificate)

பொறியாளர் அல்லது நில அளவையர் (*Surveyor)* சான்று அளிக்கும் வேலையின் மதிப்பின் அடிப்படையில் ஒப்பந்தம் அளித்தவர் அவ்வப்பொழுது ஒப்பந்தக்காரருக்கு பணம் கொடுக்கிறார். கலந்தறி பொறியாளர் (*consulting Engineer*) அல்லது நில அளவையர் ஒப்பந்தக்காரரின் அளவை புத்தகத்தில் (*Measurement Book*) பதிவு செய்யப்பட்ட அளவுகளைச் சரிபார்த்து சான்றளிக்கிறார்.

### 8.4.11 சான்றளிக்கப்படாத வேலை (Work- not Certificate)

பொறியாளர் சான்றளிக்காத சில வேலைகள் ஒப்பந்தக்காரர் கணக்கு வருடத்தின் இறுதியில் செய்திருக்கலாம். அவற்றை ஒப்பந்தக்காரர் அடக்கவிலையில் மதிப்பிடுகிறார்.

சான்றளிக்கபட்ட வேலையின் மதிப்பு மற்றும் சான்றளிக்கப்படாத வேலையின் அடக்கவிலை ஆகியவற்றால் ஒப்பந்தக் கணக்கு வரவு வைக்கப்படுகிறது. செய்த வேலையின் அடக்கவிலையிலிருந்து சான்றளிக்கப்படாத வேலையின் அடக்கவிலையைக் கழித்து, சான்றளிக்கப்பட்ட வேலையின் அடக்கவிலை காணப்படுகிறது. சான்றளிக்கப்பட்ட வேலையின் மதிப்புக்கு சான்றளிக்கப்படட வேலையின் அடக்கவிலைக்கும் உள்ள வித்தியாசம் முன்னேற்றத்திலுள்ள ஒப்பந்தத்தின் (முடிக்கப்படாத ஒப்பந்தம்) அந்த வருட லாபமாகும்.

| | |
|---|---|
| செய்யப்பட்ட வேலையின் அடக்கவிலை | *xxx* |
| கழி: சான்றளிக்கப்படாத வேலையின் அடக்கவிலை | *xxx* |
| சான்றளிக்கபட்ட வேலையின் அடக்கவிலை | *xxx* |
| சான்றளிக்கப்பட்ட வேலையின் மதிப்பு | *xxx* |
| கூட்டு: லாபம் | *xxx* |
| சான்றளிக்கப்பட்ட வேலையின் மதிப்பு | *xxx* |

குறிப்பு

**ஒப்பந்தக் கணக்கு**

| | | | |
|---|---|---|---|
